
விருட்சம்




விருட்சமாகி
விண்தொட்ட
உங்கள்
31 ஆம் நாள்
நினைவில் ...



கிறிஸ்துவுக்குப் புகழ்


அவர் தனது பூங்காவில் எதைநினைத்து தியானித்தாரோ



இறுதியில் அதுவாகவே....







மண்ணில் விழுந்த விதை


கடந்த 20ம் நாள் மாங்குளம் - மல்லாவி வீதியிலே கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட அருட்தந்தை கருணாரத்தினம் அடிகளார் யாழ் மறை மாவட்டத்திலும், ஈழத் தமிழ் மக்களின் வரலாற்றிலும் ஆழமாகத் தடம் பதித்த ஒரு மாபெரும் மனிதனாவார்.


பல் பரிமாண ஆளுமை கொண்ட ஒரு குருவாக, ஒரு தமிழ் மகனாக, ஓர் ஆசிரியனாக, ஓர் அரசியல்வாதியாக, ஓர் அறிவாளியாக, ஒப்பற்ற தலைவனாக வாழ்ந்து சென்றுள்ளார் என்று சொல்வதிலும் பார்க்க அவர் போராடி மடிந்துள்ளார் என்று சொல்வது மிகப் பொருத்தமாகும். அவரது போராட்டம் வன்முறை சார்ந்த ஆயுதப் போராட்டம் அல்ல. மாறாக "ஆட்சி புரிவோர், அதிகாரம் செலுத்துவோர், இருள் நிறைந்த இவ்வுலகின்மீது ஆற்றல் உடையோர், வான்வெளியிலுள்ள தீய ஆவிகள் ஆகியவற்றோடு..." (எபே.6:12) "உண்மையை இடைக்கச்சையாகக் கட்டிக்கொண்ட, நீதியை மார்புக் கவசமாக அணிந்து நின்று, அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்தநிலையைத் தன் காலணியாகக் கொண்டு, நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக்கொண்டு, மீட்பைத் தலைச் சீராவாகவும், கடவுளின் வார்த்தையைத் தூய ஆவி அருளும் போர் வாளாகவும் ஏந்திக்கொண்டு" (எபே.6:15-17) போராடி வீழ்ந்தார்.

எம் எக்ஸ் என்றும், கருணாரத்தினம் அடிகளார் என்றும், கிளி பாதர் என்றும், கிளி மாஸ்டர் என்றும் பலராலும் அழைக்கப்பட்டுவந்த இந்த மாபெரும் மனிதனின் சாவு யாழ் திருச்சபைக்கும் ஈழத் தமிழ் மக்களுக்கும் பேரிழப்பு என்பதை எவரும் மறுக்க முடியாது.


விசுவாச மலை

அருட்தந்தை கருணாரத்தினம் அடிகளாரின் வாழ்வு இறை விசுவாசத்தில் கட்டப்பட்டதொன்றாகவே இருந்துள்ளது. தனது வாழ்வின் இருப்பும், அதன் இயக்கமும் இறைவனே என்று நம்பி வாழ்ந்தவர். "ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை." (திபா.23:1) என்ற திருப்பாடலின் வரிகள் அவரது நாவில் அடிக்கடி அசைந்தாடும். தனது வாழ்வின் ஒவ்வொரு அசைவுகளிலும், நிகழ்வுகளிலும் இறை விருப்பத் தைக் கண்டறிந்து செயற்பட்ட குருவாக வாழ்ந்து வந்தார். அதிகாலை துயில் எழுந்து அனுதினமும் அவர் மேற்கொண்டு வந்த இறைபுகழ், இறைவார்த்தைத் தியானம், ஒப்புக்கொடுத்த திருப்பலி யாவும் இறை திருவுளத்தை அறிந்து கொள்ளும் நேரமாகவும், இறைவனின் வல்லமையைப் பெற்றுக்கொள்ளும் நிகழ்வுகளாகவும் அவருக்கு அமைந்திருந்தன. நற்கருணைப் பிரசன்னத்திலே வீற்றிருப்பதென்பது அவரது மனதுக்குப் பிடித்தமான ஓர் அற்புத நிகழ்வாக இருந்து வந்தது. அவர் மேற்கொண்டு வந்த சமயப்









பணிகளும், சமூகப் பணிகளும் வெறுமனே அவருடைய அறிவிலிருந்தோ அல்லது உணர்வுகளிலிருந்தோ ஏன் மனித தேவைகளிலிருந்தோ பிறந்தவையல்ல. மாறாக தான் இறைவனோடு கொண்டிருந்த உறவின் வெளிப்பாடகவே அவற்றைக்கருதி செயற்பட்டு வந்தார். அதனாலேயே தனது வாழ்வில் பல, சொல்லொணாச் சவால்களை அவர் சந்தித்த போதும், மனத் தளர்ச்சிக்கும், விரக்திக்கும், சோர்வுக்கும் இடம்கொடாது உறுதியோடும், துணிவோடும் தொடர்ந்து போராடி வாழ முடிந்தது.

அறிவுக் களஞ்சியம்

அருட்தந்தை கருணாரத்தினம் அடிகளார் ஓர் அறிவுக் களஞ்சியமாக வாழ்ந்து சென்றுள்ளார். எந்த வேளையிலும், எந்தவொரு பொருளிலும் பேசக்கூடிய ஆற்றல் கொண்டவர். விவிலியமா? ஆன்மீகமா? அரசியலா? சமூகவியலா? சட்டங்களா? மனித உரிமைகளா? தமிழா? விஞ்ஞானமா? கணிதமா? இறையியலா? மெய்யியலா? வைத்தியமா? வரலாறா? கலையா? இலக்கியமா? எத்துறைகளிலும் அவர் அறிவு கொண்டவராகவே இருந்து வந்துள்ளார். அவர் கொண்டிருந்த அறிவு வெறும் புத்தக அறிவல்ல. (theoretical knowledge) அது வினைத்திறன் கொண்ட (practical knowledge) அறிவாகவே இருந்தது. அவரது பல்துறை சார்ந்த அறிவும், வெட்டிப் பேசும் பேச்சாற்றலும் அவரை எந்த இடத்திலும், எந்த மனிதர் முன்னும் தலைகுனிய வைத்து விடவில்லை. வெவ்வேறு துறைசார்ந்த அறிஞர்கள், அரசியல் வாதிகள், இராஜதந்திரிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் என்று பல தரப்பினரும் அவரிடம் வந்து சென்றனர். இத்தனைக்கும் எந்தவொரு பட்டத்தையும் தனது பெயரோடு அவர் கொண்டிருக்கவில்லை.

சிந்தனை வேகம்

அருட்தந்தை கருணாரத்தினம் அடிகளாரின் சிந்தனை வேகம் அளவிடற்கரியது. அவர் கொண்டிருந்த அறிவு அவரை ஒரு முற்போக்குச் சிந்தனையாளராகவும், தூர நோக்குடையவராகவும், அதேவேளையில் செயற்பாட்டு வேகம் கொண்டவராகவும் ஆக்கி வைத்தது. இத்தகைய சிந்தனை வேகமும், வினைத்திறனும் கொண்ட அடிகளாரின் ஆளுமைக்கு முன் அதிகாரிகள் ஈடுகொடுக்க முடியாமல் நின்றார்கள். அவருடைய துணிச்சல் நிறைந்த, எழுச்சி மிகுந்த செயற்பாடுகளை ஐயத்தோடு நோக்கினர். இதனால் அவர் பெரிய பொறுப்புக்களில் அமர்த்தப்படவில்லை. பெரிய பங்குத் தளங்களும் அவருக்குக் கொடுக்கப்படவில்லை. அவரது ஆற்றல்களை இனங்கண்டுகொண்டு அவற்றைப் பயன்படுத்தி யாழ் திருச்சபை தன்னை வளர்த்துக்கொள்ள தவறிவிட்டது எனலாம். ஆயினும் எங்கெங்கெல்லாம் அவர் நடப்பட்டாரோ அங்கங்கெல்லாம் அவர் பூத்துக்குலுங்கி, காய்த்துக் கனி கொடுத்தார். அவரது நிழலில் வாழ்ந்த, பூவைப் பறித்த, கனியைச் சுவைத்த வறியவர்கள், துன்பப்பட்டவர்கள் ஒடுக்கப்பட்டவர்கள் ஏராளம்.

குருத்துவமே மேன்மையானது

பெருமையும், புகழும் அவரைத் தேடி வந்தன. பணமும், செல்வமும் அவர்முன் வந்து குவிந்தன. மனிதர்கள் அவரைச் சூழ்ந்து நின்றனர். நட்புடன் நண்பர்கள் கூடி வந்தனர். ஆயினும் எந்தச் சூழ்நிலையிலும், எந்த மனிதர் முன்னும் தனது தனித்துவத்தையும், தான் கொண்டிருந்த குருத்துவத்தையும் அவர் இழக்கத் துணியவில்லை. இந்த மாபெரும் ஒப்பற்ற குருத்துவத்திற்காகத்தானே தான் கொண்டிருந்த வங்கித் தொழிலைக்கூட விருப்புடன் துறந்த குருத்துவப் பணியாளன் ஆனார். வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் காப்பகத்தின் பொறுப்பாளராகவிருந்து பணிசெய்த காலத்தில் பலரும் அவரைப் பலவாறு நோக்கினர். சிலர் அவரை அரசியல்வாதி என்றார்கள்; சிலர் அவரும் விடுதலைப் புலி என்றார்கள்; இன்னும் சிலர் அவரும் குருவா என்று கேட்டார்கள். அனால் அடிகளாரோ தன்னை எப்போதும் ஒரு கத்தோலிக்க குருவாகவே அடையாளம் கண்டுகொண்டார். தான் கொண்டிருந்த குருத்துவத்திலேயே தனது பெருமையையும், இருப்பையும் தேடிக்கொண்டார்.

கீழ்ப்படிவுள்ள ஊழியன்

கிளி ஒரு “சண்டைக் கப்பல்.” அவர் ஒரு “முரண் குறி.” அடிகளார் பற்றிய விமர்சனங்கள் இவை. உண்மையிலேயே அதிகாரிகளோடு முரண்படுபவர் என்பது உண்மை. ஆயினும் எந்தவொரு கட்டத்திலும் அவர்களுக்குக் கீழ்ப்படிய அவர் மறுக்கவில்லை என்பதும் உண்மையானதே. கருத்து முரண்பாடுகள் எழுகின்ற போது தெளிவோடும், உறுதியோடும், எவருக்கும் அஞ்சாது தனது கருத்தை முன்வைப்பார். பின்பு முடிவு என்பது எடுக்கப்பட்டுவிட்டால், அதற்குக் கட்டுப்பட்டவராகவே அடிகளார் இருந்து வந்துள்ளார்.

இறுதியாக...

அடிகளாரது வாழ்வியல் உரிமை கேள்விக் குறியாக்கப்பட்டிருந்தபோது, அவர் பாதுகாப்புத் தேடி வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கலாம்; அல்லது மனித பாதுகாப்புக்களை உதறித் தள்ளாமல் இருந்திருக்கலாம். ஆனால் அவர் எதையும் தேடிக்கொள்ளவில்லை. காரணம் விதை மண்ணில் விழுந்த மடியவேண்டும் என்பதில் அவர் முடிவாக இருந்தார். விழுந்தார்; மடிந்தார். மாட்சியின் முடியைத் தனதாக்கிக் கொள்வார் என்பது எமது நம்பிக்கை.

அருட்பணி. றெக்ஸ் சவுந்தரா.

அஞ்சலிக்கின்றோம்

கிறிஸ்துவுக்குப் புகழ் கூறி
மக்களை வரவேற்கும் பாசக் கிளியே
கடவுளின் கல்வாரிப் பலியை
கண்ணியமாய் உவந்தளித்த பணியாளனே
திருச்செபமாலையை கரமேந்தி போராடு என்று
துன்புறும் மானிடருக்கு துணிந்து குரல் கொடுத்த
உத்தம துறவியே
அஞ்சலிக்கின்றோம்.

தி. மரிய டொறின்
அன்னை வேளாங்கன்னி முன்பள்ளி.
முன்னாள் ஆசிரியர்
வவுனிக்குளம்.

Statements issued condemning the killing of Rev. Fr. Karunaratnam

Norway condemns killing of NESoHR Chairman

Rev. Father M. X. Karunaratnam, Chairman of NESoHR, was killed Sunday 20 April by an explosive devise targeting his vehicle.

Norway condemns the killing which further adds to the already far too high civilian toll of the ongoing conflict.
Our deepest sympathy is extended to the family of Rev. Father Karunaratnam.

TNA condemns Father Karunaratnam slaying

The Illankai Tamil Arasu Kadchi strongly condemns the killing of Rev Father Karunaratnam a Priest of the Roman Catholic Church, in a claymore mine explosion on the Mallawi Mankulam road on 20th April. Rev Father Karunaratnam was a frequent user of this road, and was returning after Sunday mass.
Father Karunaratnam was actively engaged in Human Rights related work, and as Chairman of the North East Secretariat on Human Rights, played a prominent role in the exposure of the grave human rights violations to which the Tamil Civilian population in the Vanni area were continuously subjected. Such activity on the part of Rev Father Karunaratnam could only have provoked the perpetrators of such grave human rights violations against the Tamil Civilian population.

The deep penetration units of the Armed forces have several times in the past been accused of such claymore mine explosions in the Vanni in which Tamil Civilians have been killed. The killing of Rev Father Karunaratnam bears the hallmark of such an attack.

Such attacks against non-combatant civilians engaged in humanitarian work is most reprehensible and is indicative of the all pervasive environment of intolerance and impunity, that prevails in the country. It is becoming increasing manifest that the Sri Lankan State does not have the will to bring such violations to an end.
We deeply mourn the loss of Rev Father Karunaratnam who indefatigably served the legitimate interests of the Tamil Civilian population in the Vanni.

Mavai S.Senathirajah
General Secretary
Illankai Tamil Arasu Kadchi
R.Sampanthan
Parliamentary Group Leader
Illankai Tamil Arasu Kadchi
(Tamil National Alliance)

NPC condemns Rev Fr Karunaratnam's assassination

A Lamentable Loss to Civil Society and to the Country

The killing of Fr Karunaratnam adds to the heavy toll of humanitarian, human rights and religious workers killed in the course of the ethnic conflict. The National Peace Council condemns this targeted killing of a senior Catholic priest and human rights worker. In addition to his many contributions to society, Fr Karunaratnam helped to facilitate some of NPCis own peace programmes and study tours in the Wanni and Jaffna.

As head of NESoHR which was set up in July 2004, as part of the 2002 Peace Process, Fr Karunaratnam worked tirelessly to strengthen the human rights protection mechanisms in the North East of Sri Lanka. He was active in highlighting recruitment of children by the LTTE and worked tirelessly for their release. Fr Karunaratnam also sought to publicise the human rights violations to which the people living in the north east, particularly the Wanni region, were subjected to. He publicly criticised the government for many of the sufferings inflicted upon the Tamil people and challenged the national human rights institutions to live up to their mandates.

Fr. Karunaratnam entered the priesthood relatively late in life having started his career with Bank of Ceylon before opting to become a priest. He had many friends among the majority Sinhala community. He was fluent in the Sinhala language and saw the whole country as his home.

The LTTE has accused the deep penetration unit of the Sri Lankan military for the killing of Fr Karunaratnam. Whoever perpetrated this evil act has taken away yet another bridge builder who loved the whole country. While it may never be known who was responsible for his assassination we are convinced that another moderate voice has been stilled. Fr Kili, as he was popularly known, had a deep love and commitment to build bridges between ethnic and religious communities in Sri Lanka. The National Peace Council laments his loss.

Executive Director
On behalf of Governing Council

Let us condemn the killing of Fr. Karunaratnam

Fr. Karunarathnam.of the diocese of Jaffna was killed on the 20th of April 2008.

He is the third Christian priest assassinated since the so called "humanitarian war" was launched after the Mavil Aru incident where water became a political issue, thus thwarting all opportunities for any negotiated settlement. Fr. Jim Brown and his assistant disappeared while he was engaged in the service of the war victims. Fr. Pakkiya Ranjith of the diocese of Mannar was killed when he was carrying food for the refugees. The latest victim is Fr. Karunarathnam.

Fr. Karunarathnam was addressed by his admirers and loved ones as Fr. Killi. In keeping with the doctrine of Jesus, he had a deep concern for the poor. He worked tirelessly day and night for the victims. He was one who did an extraordinary amount of work for the wellbeing of the Tsunami victims as well as those victimized by the war. In his work, he closely collaborated with numerous civil society organizations.

Whenever he came to the South he used to meet his priest friends and pro-peace groups and helped them to understand the pulse of the people in the North and East, and also took to the North the feelings of the people in the South.

He had a strong belief that an effective solution can be found only in a continuous dialogue between the two communities and thus he himself became a bridge between the two.

In the current atmosphere of war, the violation of human rights is a daily occurrence in the North and East. In order to meet the challenge of defending the rights of people of these areas of Sri Lanka, he founded the NESHOR and actively engaged himself courageously and unceasingly in this very demanding exercise. Now he is no more with us.

Already Sri Lanka has gained a very bad name internationally with the killing of the 17 aid workers in the East. The country until now has neither been able to erase the ill-repute gained nor is there a sign of its being able to clear its name in the near future.

We have seen the ruthless murders of Ravi Raj and Pararajasinghe who raised the voice of the Tamil community in the parliament and the journalists such as the Sivaram, Nimal Rajan, and now Fr. Karunarathna who tried to convey the pulse of the people of North and South. What is most amazing is how the

government, provoked by its war mentality and with an attitude of callous disregard for humanity, is keeping dead silence or fabricates stories to cover up the truth about such killings.

No independent investigations have been held on any of these killings. After the assassination of the parliamentarian Ravi Raj, in order to pretend one's innocence, there was media hype about inviting 'Scotland Yard' to investigate the assassination. But soon that proved to be only an empty exercise.

While priests, who were committed to the welfare of the war victims and the poor, are being assassinated, the government is now trying to wash its hands by attributing such killings to the LTTE.

Perhaps the battle for the Madhu area was started with a view to political gain during the election in the East. This whole area is now turned into a war zone. Further, when even the international community is very clear about the fact that only through power distribution and not through war that a solution could be found to the present crisis, we are ashamed to see that the government is purposefully delaying a political solution.

Many in this government have an allergy towards human rights issues so much that they even resent the involvement of the UN Human Rights Commission as a foreign intervention. Certainly, they do this to cover up their own sins. It is everybody's knowledge that the UNHRC was very much sought after by the JVP when they were being suppressed by the UNP government. As such, it is obvious that the JVP at this moment takes a political and opportunistic stance.Sri Lanka is now well known internationally as one of the worst countries for human rights violations, while the truth is being hidden from its own people.

Therefore, as members of civil society in this land, we urge the government to investigate these killings through an international committee or organization.

- *Let the genocide war be stopped immediately and implement a political solution immediately.*
- *Create a suitable environment for independent groups to investigate the instances of human rights violations and killings.*

Christian Solidarity Movement
No281,
Deans Road, Colombo 10
Sri Lanka
24th of April 2008.

NESoHR condemns Fr Karunaratnam's assassination

It is with a profound sense of shock and loss that the Members of the North East Secretariat on Human Rights (NESoHR) learnt of the assassination of Rev. Fr. M. X. Karunaratnam, its Chairman.

After presiding over Sunday Mass, Rev. Fr. Karunaratnam was traveling to attend the 45th day Remembrance event of the late Mr. Sivanesan MP (TNA), who too was assassinated by the Sri Lanka Army's Deep Penetration Unit recently. Rev. Fr. Karunaratnam was travelling in his white Double Cab, which due to technical failure was being towed at the time the Sri Lanka Army Deep Penetration Unit detonated a Claymore Mine targeting him. It should be noted that the towing vehicle was not targeted. Rev. Fr. Karunaratnam's movements and the vehicle he traveled in were a matter of public knowledge.

Rev. Fr. Karunaratnam dedicated his life to the service of the Tamil people. He was a man passionate about the welfare of the Tamil people. He in turn was loved and respected by the Tamil people and everyone who came in contact with him.

Rev. Fr. Karunaratnam was the one-time Chairman of the NGO Consortium, and also worked for the news service, Radio Veritas prior to founding the North East Secretariat on Human Rights.

In his capacity as the Chairman of NESoHR, he worked tirelessly championing the Human Rights of the Tamil people. He travelled to the United States, Canada and Geneva meeting with Foreign Governments and Organizations concerned in Human Rights. Rev. Fr. Karunaratnam pioneered the work of NESoHR in the field of psychological counseling of the war and tsunami affected people in the Tamil Homeland.

The targeted killing of Rev. Fr. Karunaratnam is yet another glaring example of the genocidal intent with which the Sri Lankan State is waging war against the Tamil people. He is the latest member of NESoHR to be assassinated, the others being Mr. Joseph Pararajasingham (Co Founder Member of NESoHR and TNA Member of Parliament) and Mr. A. ChandraNehru (Co Founder Member of NESoHR and former TNA Member of Parliament).

NESoHR condemns in the strongest possible terms the Sri Lankan State for the assassination of Rev. Fr. Karunaratnam. NESoHR calls upon the International Community to hold the Sri Lankan State accountable for grave Human Rights violations and serious breaches in International Humanitarian Law that it is committing against the Tamil people.

Sgnd. on behalf of NESoHR officers
G. G. PONNAMBALAM, MP
Co Founder Member of NESoHR
Honorary Treasurer, NESoHR

PLEASE STOP !!

One more was added on 20th April 2008 to Sri Lanka's growing list of Tamil Catholic Priests killed in the on going ethnic conflict. The latest victim was Rev. Fr Mariampillai Xavier Karunaratnam popularly known as "Kili Father" .He was killed in a well planned and targetted claymore mine explosion WHILE HIS VEHICLE WAS BEING TOWED after a breakdown.

He is the third Catholic priest assassinated since the "humanitarian war" was launched after the Mavil Aru incident where water became a political issue, thwarting all opportunities for any negotiated settlement.

Fr. Jim Brown and his assistant disappeared on 20th August 2006 soon after they registered their names and passed through a Navy check point on their way to Allaipiddy while he was engaged in the service of the war victims.

Fr. Pakkiyaranjith of the diocese of Mannar was killed on 26th September 2007 by a claymore attack when he was carrying food for the refugees again soon after passing through the Omanthai Army check point .

Now Fr. Karunarathnam ! He was a devout priest deeply concerned about the tragic plight of his afflicted people. In all the parishes he served he dedicated himself fully for the upliftment of the poor and the oppressed. He saw God always on their side and followed Him closely, feeling, and accepting the inevitable end similar to that of Jesus, his Master. His spirituality made him a prophet.

Convinced of the need for continuous dialogue and understanding between the two communities for an effective solution, he himself became a living bridge. Whenever he went to the South he met his priest friends and pro-peace groups and helped them to understand the pulse of the people in the North and East, and also took to the North the feelings of the people in the South.

Seeing the incessant and increasing violations of human rights, he volunteered to meet the challenge of defending the rights of people, by founding the NESHoR and actively engaged himself courageously and unceasingly in this very demanding task. Now he is no more with us.

These are not just few isolated incidents in the history of our church.

- Fr. Mary Bastian from Vankalai went missing in1985 with some others after gunshots in his presbytery in the night and obvious signs of move ments of security forces were there.

- A few days earlier Rev Jeyarajasingam a Methodist Minister was found burnt to death in his vehicle at Murunkan. – These took place after these two priests had buried the bodies of some Tamils who had been killed.
- Fr. Herbeit, an American Jesuit priest in Batticoloa went missing in 1990.
- Fr. Selvarajah went missing in Sorikalmunai in Ambarai District the same year.
- Bro. Wenceslaus was killed at the Tholakatty monastry in 1986.
- Fr. Chandra Fernando of Batticoloa was shot dead in 1988.

Besides these, many churches were bombed and shelled killing hundreds of people who had sought asylum there.

Can we ever forget :

- The bombing of the Navaly RC church killing over 100 refugees?
- The 27 School children Killed by aerial bombing at Nagar Kovil
- 57 civilians killed in a bus at Kebitigollewa

Thousands of civilians kidnapped, killed or made to disappear.

Thousands more who have become the victims of this war which is stillbeing taken forward in the name of 'liberating the people'.

Therefore we demand from all parties concerned:

- **An immediate stop to the war.**
- **A just solution through negotiated settlement**
- **A stop to targeting civilians through claymore mines, shell ing and aerial bombings.**
- **A stop to killing, threatening, demoralizing and pressurizing social and religious leaders, volunteers and media men**

Justice and Peace Commission
Diocese of Jaffna

யாழ் மறைமாவட்ட குருக்கள் மன்றம்

Jaffna Diocesan Priest Union

எமது வன்னி குருத்தோழர்களுடன் துயர்பகிர்வு

தங்கள் பாசமிகு சகோதரன் சேவியர் கருணாரத்தினம் அவர்களின் அகாலமரண சோகத்தில் நனைந்திருக்கும் யாழ் மறைமாவட்ட குருக்கள் மன்றம் தமது கூட்டொருமையின் ஆழ்ந்த துயர்பகிர்வை தங்களிற்கும் எமது குருத்தோழன் ஞானரத்தினத்திற்கும் சமர்ப்பிக்கின்றது.

எமது நாட்டில் தொடரும் கொலைக்கலாச்சாரத்திற்கு எமது சகோதரன் இரையாகிவிட்டார். தொடரும் அநீதிகளை துணிவுடன் பன்னாட்டு அரங்கில் வெளிக்கொணர்ந்தவரின் குரல் அடக்கப்பட்டுள்ளது. வன்னி மக்கள் சந்திக்கும் கொடூரங்களை தென் இலங்கை சிங்களத் திருச்சபைக்கு உணர்த்தியவர் உறங்க வைக்கப்பட்டார். தமிழ் மக்களின் நிரந்தர பாதுகாப்பிற்கான அரசியல் தீர்வை சமாதான வழியில் நாடியவரின் சமாதானப்பாலம் தகர்க்கப்பட்டுள்ளது.

உரிமைகள் மறுக்கப்படுகையில் நீதி காயப்படுகிறது, அமைதி நிலைகுலைகிறது, சமூகவாழ்வின் அடித்தளங்கள் ஆட்டம்காண்கிறது. இந்நிலையை மாற்றத் துணிவுடன் தொடர்ச்சியாக பல்லாண்டுகள் ஒடுக்கப்பட்டவர்களின் குரலாக மட்டுமல்ல அவர்களோடு தன்னை முற்றுமுழுதாகக் கரைத்து கிறிஸ்தவ சீடத்துவத்தின் நிறை சாட்சியாக வாழ்ந்தவர். தனது முன்னுதாரண வாழ்வு மூலமாக சகோதர குருக்களிற்கு ஒரு இயங்குசக்தியாக திகழ்ந்தவர்.

குருதிசிந்தி இறைமகன் யேசுவிற்காக உயிர்கொடுத்த மறைசாட்சிகளோடு அடிகளாரை இணைத்துக்கொள்கிறோம். காலம் காலமாக மானிட விடிவிற்காக தங்கள் வாழ்வை கரைத்த தியாகிகளுடன் அடிகளாரை அர்ப்பணிப்பதில் நிறைவடைகிறோம்.

அன்னாரின் ஆன்மா இறைவனின் பிரசன்னத்தில் நிலைவாழ்வைப்பெற்று மகிழ்வதாக.

(யாழ் பேராலயத்தில் 22. 04. 08 இடம்பெற்ற அன்னாரின் அடக்கநாள் திருப்பலியில் வாசிக்கப்பட்ட இரங்கல் செய்தி)

ஞா.பிலேந்திரன்
தலைவர், யாழ் மறைமாவட்ட குருக்கள் மன்றம்
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்

காற்றில் ஏற்றப்பட்ட தீபம்

கிளி என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட கருணாரட்ணம் அடிகளாரின் திடீர் அகாலமரணம் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியதுடன் அவர் ஆற்றிய பணிகளில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. குருத்துவப்பட்டத்திற்கான இறுதிக்கால களப்பயிற்சியை எனது வழிகாட்டலில் பெற்றார். அந்தக் காலத்தில் அவரை நான் அதிகமாக அறியக்கூடியதாக இருந்தது. இவர் எம்.எக்ஸ். என்று அன்பாக அழைக்கப்பட்டு வந்தவர். தனது ஆரம்ப பணித்தளமான வங்கியில் மதிப்பான வேலையைத் தூக்கி எறிந்து விட்டு குருத்துவத்திற்கு வந்தவர். பல திறமைகளைத் தன்னகத்தே கொண்ட இவர் தீவிர செயற்பாடுகளில் அதிக நாட்டம் கொண்டு விளங்கினார். முன் அறிகுறியாக திகழ்ந்த இவரின் செயற்பாடுகளை புரிவது கடினம். குரல் அற்றோரின் குரலாகவும், ஏழைகளினதும் துன்பப்படுவோரினதும் பணியாளராகவும் விளங்கிய இவர் எப்போதும் எளிமையான ஒரு வாழ்வையே வாழ்ந்தார்.

இவரது வாழ்க்கை என்றும் காற்றில் வைக்கப்பட்ட தீபம் போல அசைந்தாடிக் கொண்டிருந்தது. ஒரு தீபத்தை அணையாது காப்பதற்காக பூட்டிய அறைக்குள்ளோ, வீட்டிற்குள்ளோ பாதுகாப்பாக கொண்டு செல்வார்கள். ஆனால் இவர் தன்னுடைய வாழ்வு என்னும் தீபத்தை எப்போதும் அப்படி கொண்டு சென்றவர் அல்ல. கடும் காற்றுப்போல வீசுகின்ற எந்த சவாலின் மத்தியிலும் மற்றவர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்பதற்காக துணிவோடு ஏந்தி நின்றார். இன்று அது அணைந்து விட்டது ஆயினும் இவ்வாறு ஆயிரம் தீபங்கள் மலரும் என்பது எமது எதிர்பார்ப்பு.

குருத்துவப் பயிற்சிக்காலத்தில் இராணுவத்தினரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி பேச முடியாது இருந்த இவர் தனது ஜீப் வண்டியோடு விபத்தில் சிக்குண்டு நடக்க முடியாது இருந்தார். தனது மன உறுதியாலும் இறை பலத்தாலும் இரு தடவைகளிலும் மீண்டு வந்த இவரை மரணம் இந்த தடவை ஆட்கொண்டுள்ளது.

இவர் நல்ல பணிகளுக்காக இறைவன் இவருக்கு நல்ல சம்பாவனையை அருள்வார்.

அருட்பணி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்
மறைமாவட்ட குருமுதல்வர்
யாழ்ப்பாணம்.

முழுமனித சுதந்திரத்துடன்

நான் அருட்பணி. கிளியை பெரிய குருமடத்தில் சந்தித்தேன். பல உலகியல் அனுபவங்களைப் பெற்ற முதிர்ச்சியான நிலையில் பெரிய குருமடத்தில் எம்முடன் இணைந்தவர். அஞ்சா நெஞ்சுடன் தீமையையும் அநீதிகளையும் சுட்டிக்காட்டும் மனத்துணிவு கொண்டவர். அதிகாரிகளிடம் கூட சொல்ல வேண்டியதை துணிந்து சொல்லக் கூடியவர். இவரை பல கோணங்களில் சிந்திக்க முடியும். ஆனால் நான் அவரைப் பார்க்கும் விதம் எந்நாளும் மனிதர்கள் அடிமைத்தளையிலிருந்து முழு மனித சுதந்திரத்துடன் வாழவேண்டுமென்று துடித்தவர்.

உதாரணமாக இஸ்ராயேல் மக்கள் காலாதிகாலமாக நீண்ட காலமாக எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்தபோது இறைவன் அவர்களின் கூக்குரலைக் கேட்டு மோயீசன் என்ற விடுதலையின் இறைவாக்கினரை அவர்களிடம் அனுப்பி அவர்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து வேரோடு பெயர்த்தெடுத்து வாக்களிக்கப்பட்ட பூமியில் வாழப்பண்ணியது போன்ற ஒரு நிகழ்வு இவருடைய வாழ்விலும் இடம்பெற்றது.

இவர் இரணைதீவு பங்குத்தந்தையாக இருந்தபொழுது பல ஆண்டுகளாக வசதி வாய்ப்புக்களற்ற தன்னந்தனியாக அத்தீவகத்திலே பெரிய பணம் படைத்தவர்கள், சம்மாட்டிமார்களுக்கு அடிமைகளாக இருந்த மக்கள் எல்லோரையும் (தீவகம்) வேரோடு பெயர்த்தெடுத்து கடல்கடந்த வன்னி பெருநிலப்பரப்பின் முழங்காவிலில் கானகப் பகுதியின் நெய்தலோரமாக அரசினருடன் பரிந்து பேசி அவர்களுக்கென்றொரு கிராமத்தை உருவாக்கி அவர்களை அங்கு குடியமர்த்தி அவர்களின் அடிப்படைத் தேவைகளான சமய, சமூக, கல்வி, கலாச்சார, மருத்துவ வசதிகளையும் தொழில் வளத்தையும் ஏற்படுத்திக் கொடுத்த பெருமை அமரர் அருட்தந்தை கருணாரட்ணம் அவர்களையே சாரும்.

மேலும் அவர்களின் பாரம்பரிய தாயகத்தீவகமாகிய இரணைதீவின் பெயர் மங்காதிருக்க கன்னிமரியாளின் ஆலயத்திருச்சபைக்கு இரணைமாதா ஆலயத்திருச்சபை எனப்பெயரிட்டதும் இவரது துணிச்சலான செயற்பாடாகும். யாராலும் இலகுவாக செய்ய முடியாத செயற்பாட்டை செய்து முடித்த அமரர் போற்றப்பட வேண்டியவரே.

மேலும் என்னோடு ஏழு ஆண்டுகள் ஒன்றாகப்படித்து குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு பல பங்குகளில், நிறுவனங்களில் பணிபுரிந்த அருட்தந்தை அவர்கள் எனது உற்ற தோழனாகவும் சகோதரனாகவும் இருந்தார். இறுதியாக அவரது மரணத்திற்கு சில நாட்களிற்கு முன்னர் கிளிநொச்சியில் சந்தித்தபோது பல விடயங்கள் பற்றிக் பேசினார். இறுதியாக விடைபெறுகின்றபோது கட்டியணைத்து முத்தமிட்டவர் உன்னை "இனி எப்போது காண்பேனோ" என்று கூறி தன் தோட்டத்தில் வளர்ந்த சில பழங்களை எனக்குத்தந்து சென்றதை நினைக்கும்போது என் உள்ளம் பெரும் வேதனைப்படுகின்றது.

இருப்பினும் இவ்வளவு வீரமும் விசுவாச வாழ்வும் நிறைந்த நண்பனை தந்தமைக்கு இறைவனுக்கு நன்றி கூறி இவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

அருட்பணி ஜே.பி.அன்ரனிதாஸ்,
நிதி முகாமையாளர்,
ஆயர் இல்லம்.



அருட்பணியின் அடையாளம்

ஜேம்ஸ் பத்திநாதன்

சென்ற மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக் கிழமை கருணாரத்தினம் அடிகளாரின் அகால மரணச் செய்தி கேட்டு மிகுந்த கவலையும் அதிர்ச்சியும் அடைந்த பலருள் நானும் ஒருவன். ஆயினும் அவருக்கு இப்படி ஒரு முடிவு வரும் என்று அவரை அறிந்தவர்களால் எதிர்பார்க்கப்பட்டதுதான். ஏன் அவராற்கூட அப்படியான முடிவு எதிர்பார்க்கப்பட்டதுதான். இன்றைய நாட்டின் சூழலில் அவர் தன் மனச்சாட்சியின்படி எடுத்த நிலைப்பாடுகள், அதனால் அவர் தெரிவுசெய்த சில பணிகள், அவற்றின் பல்வேறு தாக்கங்கள் அவருக்கு இந்த முடிவைத்தான் கொடுக்கும் என்பதைப் பலர் அறிந்திருந்தார்கள். அவரும் அறிந்திருந்தார்

கரவெட்டியில் கிளி அண்ணா

1972ம் ஆண்டு பருத்தித்துறைப் பங்கில் காலம் சென்ற மைக்கல்சாமி அ.ம.தி. அடிகளாருடன் பணிசெய்த போது, கரவெட்டிப் பங்கில் வாழ்ந்த கிளி அண்ணா என்று பலராலும் அழைக்கப்பட்டுவந்த அந்த இளைஞனுடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. பக்தியுள்ள இளைஞனாக, ஆன்மீக தேடல் கொண்டவனாக, குருக்களை அன்புடன் வரவேற்கின்ற இளைஞனாக, குடும்பத் தரிசிற்பிற்கும், வீடுகள் ஆசீர்வதிப்பதற்கும் குருக்களை அழைத்துச் செல்லும் இளைஞனாக அவரை நான் கண்டேன்.

கிளி குருவானார்

சில வருடங்களின் பின்பு கிளி என்ற அந்த இளைஞன் குருமடத்தில் சேர்ந்து ஒரு குருவானார். நான் பூநகரிப் பகுதியில் பணிசெய்துகொண்டிருந்த போது கிளி பாதரும் வலைப்பாட்டுப் பங்கிற்கு பங்குத்தந்தையாக நியமனம் பெற்றுப் பணிசெய்ய வந்தார். இக்காலகட்டத்தில் கிளி பாதர் தனக்கேயுரிய குணாம்சங்களோடு மக்களைக் குறிப்பாக ஏழை எளியவர்களை நேசித்து, அவர்களைக் கவர்ந்து, அவர்களுக்குப் பணிசெய்த விதம் அலாதியானது.

ஏழை எளிய மக்களை அடிமைப்படுத்தும் பல்வேறு அமைப்புக்களையும், மரபுகள் ஒழுங்கு முறைகளையும் வெகுவாகச் சாடினார். அவற்றை மாற்றியமைத்தார். தேவையில்லையென்று காணப்பட்டால் அவற்றை நிறுத்தினார். இது சில சந்தர்ப்பங்களில் சர்ச்சைகளை உருவாக்கியதும் உண்டு. ஆயினும் இத்தகைய எதிர்ப்புகள், சர்ச்சைகள் அவரை ஒருபோதும் பயப்படுத்தியது கிடையாது. அவரது மனதிற்கு எது சரியென்றுபட்டதோ அதைச் செய்து முடிக்கின்ற சுபாவம் கொண்டவராகவே திகழ்ந்தார்.

மக்களின் மனநிலை அறிந்து செயற்படும் சமூகப் பணியாளன்

எந்தக் காலகட்டத்திலும் சமயக் கடமைகள், வழிபாடுகள் என்று மட்டும் நின்றுவிடாமல் சமூகத்தின் தேவைகளை உணர்ந்து செயற்படும் திறனை அவரில் நான் கண்டேன். 1995ல் யாழ் குடாநாட்டில் ஏற்பட்ட மாபெரும் இடப்பெயர்வின் போது, மாங்குளத்தில் “கல்குவாரி” என்ற பகுதியிலும், பின்னர் வவுனிக்குளம், மல்லாவி, கல்விளான்குளம் போன்ற இடங்களிலும் பொது நிறுவனங்களின் உதவிகளோடு மக்களைக் குடியமர்த்துவதிலே முன்னின்று செயற்பட்டார்.

அவர் வவுனிக்குளம், மாங்குளம் பகுதிகளில் பணிசெய்த காலம் மிகவும் இக்கட்டுக்கள் நிறைந்த காலமாகவிருந்தது. சிறிலங்கா அரசு நடைமுறைப்படுத்திய பொருளாதாரத் தடையினால் மக்களின் அத்தியாவசியப் பொருட்கள் தடை செய்யப்பட்டும், அல்லது மட்டுப்படுத்தப்பட்டும் இருந்த காலம். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் பல்வேறு அரச, சிங்கள ஊடகங்களினால் கொச்சைப் படுத்தப்பட்டது அல்லது பயங்கரவாத நடவடிக்கையாக நோக்கப்பட்டது. தமிழ் மக்கள் எதிர்கொண்ட பட்டினிச் சாவையும், அவர்களின் வேதனைகளையும் இவ் ஊடகங்கள் வெளிக்கொணர முன்வரவில்லை இச் சூழ்நிலையில் அடிகளார் “ரேடியோ வெரித்தாஸ்” என்ற ஆசியக் கத்தோலிக்க ஊடகம் வழியாக அதன் தமிழ் பிரிவுப் பொறுப்பாளர் அருட்பணி. ஜெகத் கஸ்பார் அடிகளாருடன் சேர்ந்து தமிழ் மக்களின் பிரச்சினைகளையும், தேவைகளையும் வெளிக்கொணர்வதில் மாபெரும் வெற்றி கண்டார்.

இதன் பயனாக மக்கள் எதிர்கொண்ட பட்டினிச் சாவு நீங்க உலகத் தமிழ் மக்களிடமிருந்து பண உதவி கிடைத்தது. அதனைக் கொண்டு கிராமங்கள், நகர்கள் தோறும் பட்டினி ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். இந் நடவடிக்கைகளுக்கு அவரே பொறுப்பாகவுமிருந்தார்.

அதே காலப்பகுதியில் தமிழ்க் கத்தோலிக்க மக்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், வளர்க்கவும் என்று "விருட்சம்" என்ற கத்தோலிக்க பத்திரிகையை வன்னி மறைக்கோட்டம் சார்பாக மாதாந்தம் வெளியிட அயராது உழைத்தார். பின்னர் காகிதத் தடையினால் விருட்சம் தொடர்ந்து வளர்ந்து நிழல்கொடுக்க முடியாமற் போய்விட்டது.

அரச சார்பற்ற அமைப்புக்களின் தலைவர்

இக்காலகட்டத்தில் கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திலும் அதன் தலைவராகப் பணியாற்றினார். பொது நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து, அவற்றின் வளங்கள் வீணாகாதபடி பாதிப்புற்ற மக்களைச் சென்றடையும் வண்ணம் செயற்திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தினார்.

ஜெத்சமேனி அனுபவம்

நாவாந்துறைப் பங்குத் தந்தையாகப் பணி செய்யும் காலமிது. பிரிவினைகள், சண்டை சச்சரவுகள், குடிவெறி இவற்றிற்கு அடிமைப்பட்ட மக்கள் மத்தியிலே அடிகளார் செய்த பணி பெரிதும் போற்றத் தக்கது. பிரிவினையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதில் அடிகளார் வெற்றி கண்டார். இதனால் பிரிவினையின் விளைவான சண்டை, சச்சரவுகளும் பெரிதும் குறையத் தொடங்கின. குடிவெறியாளர் தம் குடிவெறியைவிட்டு வெளியேறினர்.

நாவாந்துறையில் பணிசெய்து கொண்டிருந்த போது யாழ் குடாநாட்டில் ஏற்பட்ட ஆயுத தாரிகளின் கொலை நடவடிக்கைகள் காரணமாக அடிகளார் இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்றார். இதற்குப் பிந்தின காலம் அவருக்கு மிகுந்த வேதனைகள் நிறைந்த காலமாக அமைந்தது என்று கூறினால் தவறானது என்று யாரும் கூறிவிட முடியாது. இடம் பெயர்ந்தவர், அகதி என்று ஏவிவிட்ட மற்றவர்களின் சொல் அம்புகள் அவரைக் குத்தித் தாக்கிய காலம் அது. யேசுவின் தமது சாவுக்கு முன் ஜெத்ஸமேனித் தோட்டத்திலே அனுபவித்த வேதனைகளைப் போன்றதாகவே அடிகளாரும் இவ் வேதனைகளை அனுபவித்தார். ஆயினும் அந்த ஜெத்ஸமேனி அனுபவத்தை அவர் புறந்தள்ளாது ஏற்றுக்கொண்டே வாழ்ந்தார்.

மனித உரிமைகள் அமைப்பில் பணி

இக் காலகட்டத்திலே தான் வடக்குக், கிழக்கிற்கான மனித உரிமைகள் அமைப்பு அமைக்கப்பட்டு அதன் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். இப் பொறுப்பை ஏற்ற காலம் தொடக்கம் தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பான நம்பத் தகுந்த செய்திகள் சர்வதேச ஊடகங்களுக்கும், மனித உரிமை ஸ்தாபனங்களுக்கும், அரச நிறுவனங்களுக்கும் அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய விதத்திலே தெளிவுற ஆவணப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டன. வெளி நாட்டு, உள் நாட்டு ஊடகவியலாளர்களுடனான நேர் முகங்காணலிலே தமிழ் மக்களின் மனித, அரசியல் உரிமைகள் பற்றியும், அவற்றின் மறுப்புக்கள் பற்றியும் ஆங்கிலத்திலும், தமிழிலும் எடுத்தியம்பியவர்.

இத்தகைய பணியினால் தனது உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்பதை அடிகளார் நன்றாகவே அறிந்திருந்தார். அதன் தவிர்க்க முடியாத விளைவே ஏப்பிரல் 20ல் நடந்தேறிய அவரது கொலையாகும்.

இறுதியாக

அடிகளாரின் வாழ்வைப் பல்வேறு கோணங்களிலிருந்து பார்க்கலாம். சில வேளைகளில் அவரது நிலைப்பாடுகள், செயற்பாடுகள் - திருச்சபையிலும் சரி, சமூகத்திலும் சரி சர்ச்சைக்குரியவையாக அமைந்திருக்கலாம். மனித ரீதியில் சிலவேளைகளில் அவரது செயற்பாடுகள் மற்றவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாதவையாகவும் இருந்திருக்கலாம்.

ஆனால் இறைவனை நேசித்த, மனிதரைக் குறிப்பாக ஏழைகளை நேசித்த அவர்களுக்காக செயற்பட்ட ஒரு குருவாகவே அவரை நான் காண்கின்றேன். எதிர்ப்புக்களின் மத்தியிலேயும் தான் சரியென்று கண்ட சில இலட்சியங்களைக் கடைசி வரை கடைப்பிடித்த ஒரு இலட்சியவாதியாகத்தான் நான் அவரைக் காண்கின்றேன். மனித நேயத்திற்காக எத்தகைய தியாகங்களையும் செய்யக்கூடிய - சிறிய விடயங்களில் சரி, பெரிய விடயங்களில் சரி ஓர் அர்ப்பணிப்புள்ள தியாகியாகவே நான் அவரைக் காண்கின்றேன். இறுதிச் சடங்கில் பங்குகொண்டு கதறியழுத பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரில் தங்களை நேசித்த, நேசிக்கின்ற கிறிஸ்துவையே கண்டுகொண்டனர்.

அவரது குறைகளை மன்னித்து அவரது நிறைவான மனித வாழ்வுக்குரிய சம்பாவனையை இறைவனே அவருக்கு அருள்வாராக! அவரது வாழ்வும், சாவும் அவர் பரப்பிவிட்ட "கிறிஸ்துவுக்குப் புகழ்!" என்ற செய்தியைச் சொல்லிக்கொண்டிருக்கும்.



ஒடுக்கப்பட்டவர்களின் குரலாக

தான் சார்ந்த மறைக்குரித்தான செய்தியை சடங்குகளிற்கும் போதனைக்கும் மட்டும் வகைப்படுத்திக் கொள்ளாமல் தான் போதித்த வார்த்தைக்கு உயிர் கொடுத்து, மானிட உருவம் கொடுக்கும் தளத்தை அவர் உருவாக்கினார்.
தனது வாழ்வில் சந்தித்த ஒடுக்கு முறைகளுக்கும் காலம்காலமாக அனுபவித்த அடக்குமுறைகளுக்கும் அவரது உடலும் உள்ளமும் நல்விளை நிலமாகியுள்ளது. மக்களுக்கும் இறைவனுக்கும் உகந்த சிறந்த அறுவடையாக சித்திரைத் திங்கள் 20ம் நாள் எமது குருத்தோழன் சேவியர் கருணாரட்டினம் தன்னை உருமாற்றிக்கொண்டார்.

எனது நினைவு வெளியில் கரவெட்டி பங்கு என்றும் பசுமையானது. எனது முதல் பணித்தளம். குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு ஒரு கிழமைக்குள் ஆயர் எமில் கரவெட்டிக்கு போகுமாறு பணித்தார். அது ஒரு சனிக்கிழமை. வளைந்த குச்சு ஒழுங்கைகள். வேலிக்குமேல் தெருவோர வாழைக்குலைகள் என்னைப் பார்த்து வரவேற்பது போலிருந்தது. கார்த்திகை பசுமை வயல்களில் பாட்டாளி மக்களின் முகங்கள். ஒரு பனங்கூடலுக்குள் அழகான ஆலயம் ஒழித்துக்கொண்டிருந்தது. அங்கு வாழ் மக்களின் எளிமையும் மரியன்னையின் தாழ்ச்சியும் வெளிப்படுத்தும் ஒரு குறியீடு போன்ற படிமம். அங்கு ஒரு இளங்காளை துரிதமாக பணிபுரிவதும் இளவலர்கள் அண்ணா கிளியென்றும் முதியோர் தம்பி கிளியென்றும் அழைப்புக் குரல்கள்... இளம் வயதிலே ஆலயப்பணிகளைப் பொறுப் பெடுத்து வழிநடத்தி வந்ததில் பிறர் மையம் கொண்ட வாழ்வுக்கான வித்து அவரிடம் அரும்பியது, அதுவிருட்சமாக பணிக்குருத்துவம் கைகொடுத்தது.

மனித வாழ்வு ஒரு அற்புதம். ஒத்த உரிமையில் வாழ்வதுதான் பேரின்பம். உழைப்பதும் பகிர்வதும் மனிதனுக்கு கிடைத்த பெரும் வாய்ப்பு. இயற்கையோடும் மனித சமூகத்தோடும் உயிர்களோடும் ஒத்து இயங்குவதில்தான் மனிதருக்கு விடுதலை. இதைச் சிங்களச் சகோதரர்களிற்கு எப்பொழுதும் எடுத்துரைப்பார்.

இது மனித உரிமை. இந்த உரிமையை யாரிடத்திலும் மனிதர் விட்டுத்தரமுடியாது என்பதில் எப்பொழுதும் உறுதியாயிருந்தார். மௌனத்தில் மடியும் மக்களின் உரிமைக்குரலாக இறுதிமூச்சு வரையும் ஒலித்துக்கொண்டிருந்தார். நாம் இதைச் செய்யாத வரைக்கும் நம் உடன் சகோதரர்கள் சிலுவையில் தொங்கியவர்களாக இருப்பர். இயேசு உயிர் பெற்றெழுந்த விழாவில் அவர்களுக்கு பொருள் இராது என்று இறையிலாக்கம் செய்து ஆலய மறை உரைகளில் முழங்குவார்.

மக்களின் அவலங்கள் நீங்க முற்று முழுதாக தன் உயிரைப்பணயம் வைத்து வளர்த்த பணியை துணிவுடன் நாம் தொடருவதே அவரது பிரிவின் செய்தி. காலம் காலமாக மானிட விடுதலைக்கு குருதிசிந்தி இறந்த தியாகிகள், மறைசாட்சிகளுடன் அடிகளாரை இணைத்துக்கொள்வோம்.

அ. பீ யெயசேகரம்

ஓர் குருவின் மரணம்



ஈழப் போரில் பலிக்கடாக்காளாக வீழ்த்தப்பட்ட நீளும் குருக்கள் வரிசையில் பாதர் கிளியின் மரணமும் நடந்துள்ளது.

அவர் சாதாரண வரண்ட புல் வெளிகளின், பற்றைகளுக்குள் பதுங்கும் சருகுமான், முயல் முதலியவற்றுடன் வாழ, அழைக்கப்படவில்லை. அவர் பணி செங்குத்தான மலைச்சிகரங்களையும், உயர்ந்த பர்வதங்களையும் நோக்கி நடந்த யாத்திரை. அது திருச்சபைப்பணி என்றாலும் மனித உரிமை உடைபடும் எந்த உலகரசென்றால் என்ன அது இலகுவானதாக இருக்கவில்லை. இருந்திருக்கமுடியாது.

திருச்சபைப் பணி வாழ்வில் ஆயத்த நிலைகளிலும் அவருக்கு பல இடையூறுகள் வழியே கிடந்தன. இறை அருள் கடக்கவைத்தது. இலங்கைவங்கி சேவையில் இருந்து நீங்கி குருவானதும், அவர் பணி திருச்சபையை ஓர் வங்கி முகாமைத்துவமாக மாற்றவில்லை ஆன்மாக்களைத் தேடித்திரியும் ஆவலானது, அந்த நித்திய வேட்கையில் சிவில், போரங்கிகளையும் கடந்து வெளிவர முடியாத அடர் காட்டினுள் இட்டுச சென்றது.

நாவாந்துறையில் அவர் பணி மகத்தானதாகியது. மக்கள் ஒன்றுபட்டு பிரிவினைகளை மறந்தனர். இறைவாக்கில் ஊறி உயிர் பெற்றனர். சண்டை சச்சரவுகள் குறையத் தொடங்கின

ஆசாரம், அமைதி, அன்பு அவர் நடந்த வீதிகளில் பிரகாசித்தது. யாழ் கோட்டை அந்தோனியார் சிற்றாலயத்தை பாதுகாத்து வந்தவர் 'உதய கீர' என்ற சிங்கள கத்தோலிக்க இராணுவ அதிகாரி. 2005 யூனில் இவ்வாலயத்தைப் பொறுப்பேற்று புனரமைத்து வழிபாடுகளை நடத்தி புதுப்பொலிவு பெறச் செய்தவர் Fr. கருணாரட்ணம்.


1996ல் இவர் வன்னி மண்ணில் தொடங்கிய சேவை தாய் மரித்ததும், அவள் கல்லறையை சுற்றி வனப்புமிக்க பூங்காவையும், பூங்காவில் அக்கராயன் அமலமரித்தியாகிகள் அன்பளித்த சிலுவைப் பாதை சொரூபங்களுடன் புதியவற்றையும் செய்வித்து கல்வாரி பூங்காவாக்கினார். தாய் சமாதி கருவூலம் மாதர் என்பவை அவர் மனத்தில் ஒரு சாட்சியம் ஆகவே இருந்தது. மனித உரிமைகளால் பாதிக்கப்பட்ட அவர் தேற்றியதும் தேற்றாததும் அந்த தாயின் கரங்களில் தவழும் கிறிஸ்துவின் உடல் தான் - வன்னியின் துன்புற்ற மரித்த உடல்கள். இந்தபூங்காவில் புதிய ரக மலர்களை வளர்த்து வெளிநாடுகளுக்கு சந்தைப்படுத்த வேண்டும் என்ற அவர் கனவு நிறைவேறவில்லை. ஆனால் அவர் நட்ட ஏதேனின்கனவுப் பூங்கா, வயோதிபர் இல்லம், நூலகம் மறக்கப்படக் கூடாது. அவர் ஞாபகார்தத நினைவுக் கற்களாக பேணி காப்பாற்றுவது நம் கடமை.

இவ்வுறுதி அவர் இறுதி பாதயாத்திரையின் அடையாளத்தினை விளக்குகிறது. அவர் முன்பட்ட வாகன விபத்திலிருந்து அற்புதமாக குணம் பெற்றார். அது தேவதாயின் செயலென ஏற்று மடுவுக்கு பாதயாத்திரை செய்யத் திட்டமிட்டிருந்தார். தேவன்பிட்டிக்கு மடுத்தாயின் சொரூபம் கொண்டு செல்லப்பட்டதும் அங்கு 50 பேருடன் 60 கிலோ மீற்றர்கள் நடந்து சென்று தன் வாக்கை நிறைவேற்றினார். அடுத்த வாரமே அவர் அவள் வானக பூந்தோட்ட மலர்களின் வாசனை எட்டதொடங்கிற்று.

கருணாரட்ணம் அடிகள் தேவதாய் மடியில் நித்தியமாய் இளைப்பாறுவாராக.

சுவாமி ஜெயசீலன்

நிரப்பிட முடியா இடைவெளி



தானாகவே முன்வந்து தமிழினத்திற்குத் தேவையான உதவிகளை ஆன்மீகத்துடன் சேர்ந்து செய்து ஏழைகளின் உள்ளங்களைக் கவர்ந்த ஓர் உயர்ந்த பண்பாளன். ஏழைகள்பால் மிகுந்த அக்கறையுடையவர்

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் எனது உறவினருமாகிய காலம் சென்ற அருட்பணி கருணாரட்ணம் (கிளி) அவர்கள் ஆன்மீகத்துடன் சேர்ந்து மக்களுக்காகத் தொண்டாற்றியவர். தனது பணிகளை நேரமறிந்து, காலமறிந்து தமிழ் மக்களுக்காக என்றென்றும் நல்கி வந்தவர். மக்களுக்காகவே வாழ்ந்து, மக்களுக்காகவே உயிர்துறந்த உத்தமர். தானாகவே முன்வந்து தமிழினத்திற்குத் தேவையான உதவிகளை ஆன்மீகத்துடன் சேர்ந்து செய்து ஏழைகளின் உள்ளங்களைக் கவர்ந்த ஓர் உயர்ந்த பண்பாளன். ஏழைகள்பால் மிகுந்த அக்கறையுடையவர். எல்லோருடனும் மிக அன்பாகப் பழகும் சுபாவமுடையவர். குருக்கள் மத்தியிலும் நன்மதிப்பைப் பெற்றவர். பல கருத்து வேற்றுமைகள், போட்டி பூசல்கள் எழும்போது எல்லோரையும் கவரக் கூடிய வகையில் மிகச் சாதுரியமாய் பதில் அளிக்கும் சிறந்த பேச்சாளன்.

இவர் 12. 04. 1952ம் ஆண்டு கரவெட்டி பரலோக அன்னை ஆலயத்திற்கு அருகாமையில் காலம் சென்ற நீக்கிலாப்பிள்ளை மரியாம்பிள்ளை இரத்தினம் இராசமணி தம்பதிகளின் நாலாவது அன்புப் புதல்வனாகப் பிறந்தார். இவருக்கு ஒன்பது சகோதரர்கள். அதில் நான்கு பெண் சகோதரர்களும், ஐந்து ஆண் சகோதரர்களும் உண்டு.

இவர் தனது ஆரம்பக் கல்வியை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும், திரு இருதயக் கல்லூரியிலும் பயின்றார். அக்காலத்திலேயே வறிய பிள்ளைகளுக்கு தனது அறிவாற்றலைக் கொண்டு கல்வி கற்பித்தார். பின்பு அரசியல் மேடைகளில் கலந்து தமிழரசுக் கட்சியில் காலம் சென்ற உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கே. ரி. ராஜலிங்கத்திற்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தார். அதன்பின் இலங்கை வங்கியில் பருத்தித்துறைக் கிளையில் குமாஸ்தாவாக சிறிது காலம் கடமையாற்றினார். பின்பு அதனையும் உதறித் தள்ளி ஆண்டவர் இயேசுவின் இறையரசைப் போதிக்கும் குருவாக வரவிரும்பி குருமடத்தில் சேர்ந்து 1989ம் ஆண்டு புரட்டாதி மாதம் இருபத்தைந்தாம் திகதி காலம் சென்ற தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டார். அதன்பின் குருவாக பல

பணித்தளங்களில் பணிபுரிந்தார். அத்துடன் யாழ் மறைமாவட்ட கல்வி ஆணைக்குழுவின் தலைவராகவும் செயலாற்றினார்.


அதியுயர்ந்த சிந்தனையுள்ள அற்புத மனிதரை வடமராட்சிமண் இழந்துவிட்டது. பக்கம் சாராமல் நின்று, நியாயங்களை நீதியாக திறந்த மனதுடன் பேசும் ஓர் உத்தமரை கரவைமண் பறிகொடுத்துவிட்டது. இவர் சொந்த நன்மைக்காகவோ, சுயநலத்திற்காகவோ செயற்படமாட்டார். பொதுநலன் ஒன்றே தனது குறிக்கோளாக நின்று தன்னாலான சேவைகளை மக்களுக்காக இரவுபகல் என்று பாராது, இன்பமென்னவென்று அறியாது பணிபுரிந்த ஓர் உயர்ந்த இலட்சியவாதி. தான் மரணிக்கும்வரை தமிழ் மக்களுக்காக இறுதிவரை பணிபுரிந்த ஓர் மாமனிதர்.

தான் சேவை செய்யும் மக்களுடன் உணர்வொன்றிக் கலந்து அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரவும், நெருக்கடி நிலைகளைச் சமாளிக்கவும் உறுதுணை புரிந்தவர். தான் வாழும் சூழலைப் புரிந்து கொண்டு அதனுள் தன் தனிப்பண்பை மனித நேயம் தவறாது மனித உரிமைகட்காக நேரம் காலம் பாராது குரல் கொடுத்த ஓர் சேவையாளன்.

அக்காலத்து அரசியலில் காலம் சென்ற மாமனிதர் குமார்பொன்னம்பலம் அவர்களிற்கு எதிராகப் பிரசாரம் செய்தவர். இறுதியில் மாமனிதர் குமார்பொன்னம்பலத்தின் வளாகத்தில் நடந்த அஞ்சலிக்கூட்டத்தில் அவர் செய்த சேவைகளைப் பாராட்டி அஞ்சலி உரை நிகழ்த்தினார்.

இவ்வளவு சிறப்புகளும் நிறையப்பெற்ற இவர் நீண்டகாலம் வாழக்கூடாது என்பது இறைவனின் திட்டம். யாரால் என்ன செய்யமுடியும். கடமை வீரனின் அகாலமரணம் அன்னாரின் குடும்பத்திற்கும், தமிழ் சமூகத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அமரரின் ஆன்மா இறைவனில் சாந்திபெற பிரார்த்திப்பதோடு அவரது பிரிவால் துயருறுகின்ற அனைவரும் மன அமைதிபெற இறைவனை இறைஞ்சுகின்றேன்.

தான் வாழும் சூழலைப் புரிந்து கொண்டு அதனுள் தன் தனிப்பண்பை மனித நேயம் தவறாது மனித உரிமைகட்காக நேரம் காலம் பாராது குரல் கொடுத்த ஓர் சேவையாளன்.



ஏ. ஆனந்தராஜா
முன்னையநாள் செயலாளர்
புனித அந்தோனியார் ஆலயம்
கரவெட்டி.

திருப்பலி

இன்னும் பலிப்பீடங்களுக்காய்
நமது ஆடுகள்
அழைத்துசெல்லப்படுகின்றன
அவர்களின்
அதிகாரம் நிரம்பிய
சிலுவைகளின் முன்னால்
சனங்கள் ஜெபித்தனர்.
போர் நடக்கும் தேசத்தில்
சிலுவைகளை
சுமந்து திரியும் சனங்களோடு
அடிகளார் போனார்.
யேசுவோடு பல ஆயிரம்
சனங்கள்
இங்கு சிலுவையில்
அறையப்பட்டனர்.
சவப்பெட்டிகள் நிரம்பிய
தேவாலயத்தில்
அவரின் ஜெபபிரசங்கம்
அதிகாரத்தின் முகத்தை
குத்தியபடியிருந்தது.
கனிகள் இல்லாத தேசத்தில்
தோட்டம்
கருகிக்கிடந்தது.
சருகுகளின் மத்தியில்
அடிகளார் மரக்கன்றுகளுக்காய்
விதைகளைத் தேடினார்.
குழந்தைகள் வந்தனர்.
யுத்தத்தில் பதுங்கியிருந்த
சனங்களின் மத்தியில்
அடிகளார் உயிர்களை
தேடிப் பொறுக்கினார்.
நசிந்து உடைந்து சிதறிய
சிலுவைகளின் கீழாய்
சனங்களின்
அழுகை கிடக்கக் கண்டார்.
அழிந்துபோன தேவாலயத்தில்
தொங்கிய
சிலுவையுடனிருந்தார்
சனங்கள் திருப்பலியாகினர்.
சிலுவை பொறிக்கப்பட்ட
வண்டியில்
நிரம்பியிருந்தது பிராத்தனைகள்
அடிகளாரும் அவரது சிலுவையும்
சனங்களின் தெருவில்
பலியாகி கிடக்கக்கண்டேன்



மறைவுக்கு ஓர் மறையுரை

என் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே இத்தனை காலம் எம்மோடு வாழ்ந்து ஒரு குருவாக எங்கள் மத்தியிலே பணியாற்றி நல்ல நண்பனாக எம்மோடு உறவாடி நல்லாயனாக வழிகாட்டி நல் உறவாக எங்கள் மத்தியில் நெருக்கமாகப் பழகி பல்வேறு விதமான பரிமாணங்களோடு எங்களோடு வாழ்ந்து இன்று இறைவனடி சேர்ந்துள்ள அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளாரின் இறுதிச் சடங்கு வன்னியிலே வவுனிக்குளத்திலே நடந்துகொண்டிருக்கின்ற அதே நேரத்திலே நாங்கள் இங்கு ஒன்று கூடி நேரடியாக அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த முடியாத நிலையிலே அவருக்காக இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம். இந்த இறுதி பிரியாவிடைப் பலியை ஒப்புக்கொடுக்க ஒன்று கூடி வந்துள்ளோம்.

இந்த குருவானவர் அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளர் கிளி என்று நாங்கள் அன்பாக அழைக்கும் இக்குருவானவர் இன்று எம்மோடு இல்லை. அவருடைய வாழ்வும் பணியும், மனித நேயச் செயலும் எத்தகையது என்பது எம் எல்லோருக்கும் தெரிந்ததே. அவர் ஒரு அசாதாரணமான மனிதராகத்தான் வாழ்ந்து வந்தார். அவரிடம் பல முரண்களில் சங்கமத்தை நாம் காண்கின்றோம். அவரைப் புரிந்து கொள்வது அவ்வளவு இலகுவானதல்ல. அவர் ஒரு புரியாத புதிராகவே இருந்தார், இறந்தார் இன்றும் என்றும் அவர் எங்களுக்கு ஒரு புதிராகவே இருப்பார். ஏன் என்று சொன்னால் அவருடைய வாழ்க்கையிலே நாங்கள் பல முரண்களில் சங்கமத்தைக் காண்கின்றோம். அவரோடு பழகியவர்களுக்கு இது தெரிந்திருக்கும். ஒரு கட்டத்திலே அவர் மிகவும் பழமைவாதி போல, எல்லா பாரம்பரியங்களையும் பேணுபவர் போல இருப்பார். ஆனால் இன்னுமொரு கட்டத்திலே அவர் எல்லாவற்றையும் தூக்கியெறிந்து விடுகின்ற ஒரு புதிய புரட்சிவாதி போல புதிய மாற்றங்களைப் பற்றி சிந்திப்பார், செயற்படுவார். ஆகவே பழமைக்கும், புதுமைக்கும் இடையிலான அந்த இரண்டு முரண்களுக்குமிடையிலான சங்கமமாக அவர் இருப்பதை நாம் காணலாம். அறிவாற்றல் மிக்கவராக நுண்ணிய அறிவியல் சிந்தனைகளோடு பேசுவார். ஆனால் அதே வேளையிலே ஆழமான விசுவாசத்திலே நின்று அதிலே மிகவும் உண்மையாக இருப்பார். ஆகவே சாதாரணமாக எதிர்நிலைகளாகத் தெரிகின்ற பல விடயங்கள் இவரிலே சங்கமிப்பதனாலே இவர் ஒரு முரண்குறியீடாக எங்கள் மத்தியிலே வாழ்ந்திருந்தார்.

அவர் ஒரு அசாதாரணமான கலவையாகக் காணப்பட்டார் அவருடைய இந்த தன்மை அவரது ஊரில் இருந்து வந்திருக்கக் கூடிய அவரது இயல்புகள், குடும்பத்தில் இருந்து வந்த இயல்புகள் அதனோடு சேர்ந்து அவருக்கு இறைவன் கொடுத்திருந்த அறிவுத் திறமை, புத்திக்கூர்மை, ஆராயும் திறன், வரலாற்று பாங்கான சிந்தனை ஓட்டம், அரசியல் ஈடுபாடு, மக்கள் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளுகின்ற தன்மை, சமூகத்திற்குள்ளேயான போராட்டங்களை புரிந்து கொள்ளுகின்ற திறமை, மனிதருடைய உள்ளார்ந்த உணர்வுகளை ஆய்ந்தறியக் கூடிய ஒரு உளவியல் ஞானம் போன்றவற்றின் கூட்டுக் கலவையாக அமைந்திருந்தது. இவ்வாறு பல விதமான தன்மைகள் அவருக்குள்ளே இணைந்த பொழுது அவர் ஒரு வித்தியாசமான கலவையாக, ஒரு அசாதாராணக் கலவையாக அமைந்த படியால் அவரைக் காண்கின்றவர்கள், அல்லது அவரோடு உறவு கொள்பவர்கள் அவரை எளிமையாகப் புரிந்து கொள்ள முடியாத நிலையிலே அவர் இருந்தார். இவை எல்லாவற்றோடும் சேர்ந்து அவரிடம் காணப்பட்ட தீவிரமான வேகம் எதனையும் விரைவாகச் செய்கின்ற, தீவிரமாகச் செயற்படுகின்ற சில வேளைகளில் அதி தீவிரமாகச் செயற்படுகின்ற அவரது போக்கு, இவை அனைத்துமே அவரில் இணைந்த பொழுது பிறரால் இலகுவில் புரிந்து கொள்ள முடியாத ஒரு புதிரான மனிதனாகவே அவர் வாழந்தார், இறந்தார். ஆகவே

என்றைக்கும் அவர் அவ்வாறுதான் இருக்கப்போகின்றார்.

இது அவரது பிழையுமல்ல அவரைப் புரிந்து கொள்ள முடியாதவர்களின் பிழையுமல்ல. ஏன் என்று சொன்னால் சில மனிதர்கள் இவ்வாறுதான். அவர்கள் வரலாற்றிலே புரிந்து கொள்ளப்பட முடியாத மனிதர்களாகவே வாழ்ந்துள்ளார்கள். அவர்களிடம் காணப்பட்ட முரண்களின் சங்கமம் அவர்களை அவ்வாறான நிலைக்கு தள்ளிச்செல்கின்றது. இன்றைய இறைவார்த்தையிலே அதனை நாங்கள் தெளிவாக வாசிக்கக் கேட்டோம். யோவான் ஒரு முரண்களின் சங்கமமாகத் இருந்தார். இயேசுவும் ஒரு முரண்களின் சங்கமமாகத்தான் இருந்தார். இவ்வாறு பல முரண்பாடுகள் அவர்களிடையே சங்கமிக்கும் போது அவர்களுடைய ஆளுமை புரிந்து கொள்ளப்பட முடியாத ஆளுமையாக அவர்களுடைய ஆளுமையைச் சூழ ஒரு திரை விழுந்த நிலையில் யாராலும் அதனை உய்த்துணர்ந்து முழுமையாக புரிந்து வெளிப்படுத்த முடியாத தன்மையோடு பல விதமான கோலங்களைக் காட்டுகின்ற பல விதமான பரிமாணங்களைச் வெளிப்படுத்துகின்ற ஒரு தோற்றப்பாடு ஏற்படுகிறது இத்தகைய ஆளுமை இறைவாக்கினரிடம், இறைமனிதர்களிடம் தங்களுடைய வாழ்க்கையை சிரத்தையோடு ஏற்றுக்கொண்டு தங்களையே அர்ப்பணமாக்க முயல்கின்றவர்களிடம் காணப்படுகின்றது..

இறுதியாக வடக்கு, கிழக்கு மனித உரிமைகள் செயலகம் என்ற அமைப்பாகப் பரிமாணம் பெற்றது. இன்று உலகம் முழுவதும் அவரது மரணத்தை நினைவு கூருகின்ற பொழுது இந்த மனித உரிமைகள் செயலகத்தின் பணிப்பாளராகத் தான் நினைவு கூருகின்றது.



உலகில் நாங்கள் காணுகின்ற பல உயர்ந்த மனிதர்கள் இவ்வாறு தான் தனித்துவமானவர்களாக, அசாதாரணமானவர்களாக, சாதாரணமான விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்டவர்களாக விளக்கங்களுக்கும், வியாக்கியானங்களுக்கும் புறம்பானவர்களாக இருந்துள்ளார்கள். இத்தகைய ஒரு மனிதரைத் தான் இன்று நாங்கள் இழந்திருக்கின்றோம். அவரை நாங்கள் புரிந்து முடிக்கவில்லை. அது இயலாத காரியமும் தான். அதற்கு அவசியமும் இல்லை ஆனால் அவரிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டி விடயங்கள் சில எஞ்சியிருக்கின்றன.

அவரிடம் காணக்கூடியதாக இருந்தது, என்னைப் பொறுத்த மட்டிலே அவருடைய இரு கண்களாக திகழ்ந்தது மண்மீதும், மக்கள் மீதுமான பற்றும், திருச்சபை மீதிலான பாசமும் இந்த இரண்டு பற்றும் அவரிடம் மிக ஆழமாக இருந்ததை அவரோடு உறவு கொண்ட காலங்களிலே நான் அவதானித்திருக்கின்றேன். மிக ஆழமாக அவர் தன் மக்களை அன்பு செய்தார். மண்ணை அன்பு செய்தார். அதற்காக அவர் எதையும் இழக்கத் தயாராக இருந்தார். அதற்குச் சமனாகவே அவர் திருச்சபையை அன்பு செய்தார். இயேசுவை அன்பு செய்தார் ஆகவே மக்களுக்காகவும், திருச்சபைக்காகவும், இறையாட்சிக்காகவும் எதையும் இழக்கத் தயாராக இருந்தார். குரு முதல்வர் முன்னுரையில் சொன்னது போல அவருடைய வாழ்க்கை காற்றில் இட்ட தீபமாக அசைந்தாடிக்கொண்டிருந்தது. அவருடைய குருத்துவம் தொடங்கி அரவது மரணம் வரைக்கும் ஒரு அல்லாடிய வாழக்கையாகத்தான் அமைந்திருந்தது. காற்றிலே தீபம் அணைவதற்கு அசைவது போலவே அவருடைய வாழ்க்கையும் மூன்று முறை அசைநது ஆடியது. அவருடைய அழைத்தலும் அவ்வாறு தான் அல்லாடிக்கொண்டிருந்தது. அவருடைய உயிரும் அவ்வாறு தான் அல்லாடிக்கொண்டிருந்தது. அவற்றுக்கூடாகவும் அவருடைய வாழ்வுக்கான அர்ப்பணத்திலே எந்தவேளையிலும் களைத்தவரால்ல, சோர்ந்து போனவருமல்ல. தன்னுடைய அர்ப்பணத்துக்காக, தான் எதை நம்பினாரோ அதற்காக தன்மைக் கையளிப்பதற்கு எப்போதுமே தயாராக இருந்ததை நாம் காண்கிறோம்.

அவருடைய மரணத்தையிட்டு நாங்கள் யாரும் கவலைப்பட தேவையில்லை என்றுதான்

நான் நினைக்கிறேன். ஆந்த மரணம் அவர் எதிர்பார்த்ததுான். அவர் தேர்ந்து கொண்ட வாழ்க்கை அவர் வாழ்ந்த வாழ்க்கைமுறை, அதனுடைய தர்க்கரீதியான விழைவுதான் இந்த மரணம். இந்த மரணத்தை அவரும் எதிர்பார்த்தார். நாங்கள் எல்லோரும் எதிர்பார்த்தோம். ஆகவே அது ஒன்றும் அதிசயமானது அல்ல. அதையிட்டுக் கவலைப்படவும் தேவையில்லை. தனக்கென்று சொல்லி அவர் வரிந்து கொண்ட வாழ்க்கை முறைப்படி வாழ்ந்து அவர் தன்னைப் பலியாக்கியுள்ளார்.

நேற்றைய தினம் வெளிநாட்டிலுள்ள ஒருவரோடு தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தபோது அவர் சொன்னார் சில நாட்களுக்கு முன் தாம் கிளி பாதரோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகவும், அப்பொழுது கவனமாக இருங்கள் பாதர் உங்களுக்கு ஆபத்து இருக்கும் என்று தான் எச்சரித்த போது என்ன நான் விரைவாக மோட்சத்திற்குப் போவது உங்களுக்கு விருப்பமில்லையா? ஏன்று அருட்தந்தை தன்னிடம் கூறியதாகவும் கொன்னார். அவ்வாறுதான் அவர் வாழ்வையும், மரணத்தையும் ஏற்றுக் கொண்டிருந்தார். அவர் வாழ்வதும் ஒன்று மரணிப்பதும் ஒன்று என்ற மனப்பக்குவத்தோடு தான் வாழ்ந்து வந்தார்.

அவர் பயமென்ற விடயத்தை அறியாதாவராகவே இருந்தார். ஒரு முறை அவருடன் உரையாடுகின்ற போது அவர் சொன்னார் கதிரையில் இருப்பவன் தான் விழ வேண்டும் என்ற பயத்தோடு இருப்பான். நான் நிலத்தில் இருக்கின்றபடியால் ஒரு போதும் விழமாட்டேன், பயப்படவும் மாட்டேன். இவ்வாறு உரையாடுகின்ற பொழுது அவருடைய சிந்தனையைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது சொன்னார் எதையும் நாங்கள் இழக்கத் தயாராக இருக்க வேண்டும் பெயரைக் கூட என்று சொன்னார். நான் நல்லவன் என்ற பெயரைக் கூட இழக்கத் தயாராக இருங்கள் என்று அந்த உரையிலே கேட்டார். ஏன் என்று சொன்னால் அவரைப் பொறுத்த மட்டிலே அவர் எதையும் இழக்கத் தயாராக இருந்தார். ஆனால் பல மனிதர்கள் எதை இழந்தாலும் தங்களுடைய நற்பெயரை இழக்கத் தயாராக இருப்பதில்லை. ஆனால் இவர் அதற்கும் தயாராக இருந்தார்.

என்னைப் பற்றி யார் என்ன கதைத்தாலும், என்ன சொன்னாலும், எப்படிப் பேசினாலும், நான் எனக்கு சரியெனப்பட்டதின் படி இறைவன் எனக்கு தருகின்ற அழைப்பின்படி இறைவனிடத்தில் இருக்கின்ற நம்பிக்கையின் படி வாழுவேன் என்று சொல்லி தன் பெயரைக் கூட பணயம் வைத்து தன்னுடைய பணித்திசையை தீர்மானித்து நடக்கின்ற மனப்பக்குவம் இவரிடத்தில் இருந்தது. ஆகவே எந்த விதத்திலும் பயமற்றவராக பெயர் இழப்பிற்கும் பயமில்லை, உயிரிழப்பிற்கும் பயமில்லை, எதற்கும் பயமில்லாத துணிந்த மனிதராக அவர் தன்னுடைய வாழ்வை நடாத்தி வந்தார். ஆகவே அவர் தேர்ந்தெடுத்த அந்த வாழ்க்கை முறைக்கு ஏற்ற முடிவையே அவர் பெற்றிருக்கின்றார். ஆகவே அதற்குரிய சம்பாவனையை இறைவனுடைய சந்நிதானத்திலே பெற்றுக்கொள்வார். ஆகவே இதைப்பற்றி நாங்கள் கவலைப்பட பெரிதாக ஒன்றும் இல்லை. ஆனால் அவருடைய சாட்சிய வாழ்வில் இருந்து பெற்றுக்கொண்டு எங்களுடைய வாழக்கையிலே கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் நிறையவே உண்டு.

அவருடைய இரண்டு கண்கள் என்று நான் குறிப்பிட்ட இரண்டு விடயங்கள் ஒன்று திருச்சபை , மற்றையது தன்னுடைய மக்கள். தமிழ் மக்களுக்கான அவருடைய அர்ப்பணமும் ஈடுபாபடும் சிறுவயதில் தோன்றியதாக இருக்கலாம்.

மக்களுக்கான தமது அர்ப்பணத்தை ஒரு திசையிலே அவர் நகர்த்திச் சென்றார் என்றால் மறுதிசையிலே அவர் தனது திருச்சபைக்கான அர்ப்பணத்திலும் எந்த வித சமரசமும் செய்து கொள்ளாதவராக இருந்தார் என்பது அவர் பணியாற்றிய பங்குத் தளங்களில் வாழ்ந்த மக்களுக்கு நன்கு தெரியும்.



அவர் குருவாக வர முன் தமிழர் விடுதலைக் ட்டணியிலே ஒரு மேடைப்பேச்சாளாராகத் திகழ்ந்தார். உடுப்பிட்டி பாராளுமன்ற தொகுதிக்கான வேட்பாளருக்கான பிரச்சாரத்திலே அவர் ஈடுபட்டு வந்தார். தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை முதல் முதலாக தமிழ் மக்கள் சார்பில் பாராளுமன்றத்திற்கு அனுப்பிய தேர்தல் இதுவாகும்.

இவ்வாறாக ஆரம்பித்த அவருடைய அரசியல் ஈடுபாடு மக்கள் மீதான தாகம் மக்களுடைய உரிமைகளுக்காக குரல் கொடுக்கின்ற ஆர்வம் அவரிடம் தொடர்ந்து வளர்ந்து வந்து இறுதியாக வடக்கு, கிழக்கு மனித உரிமைகள் செயலகம் என்ற அமைப்பாகப் பரிமாணம் பெற்றது. இன்று உலகம் முழுவதும் அவரது மரணத்தை நினைவு கூருகின்ற பொழுது இந்த மனித உரிமைகள் செயலகத்தின் பணிப்பாளராகத் தான் நினைவு கூருகின்றது. இந்த அமைப்பினூடாக அவர் தமிழ் மக்களுக்கு செய்த நன்மைகளை நினைத்து புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அனைவரும் வேறுபாடின்றி ஒன்று சேர்ந்து இன்று அஞ்சலி செலுத்துகின்றார்கள்.

இந்த வகையிலே மக்களுக்கான தமது அர்ப்பணத்தை ஒரு திசையிலே அவர் நகர்த்திச் சென்றார் என்றால் மறுதிசையிலே அவர் தனது திருச்சபைக்கான அர்ப்பணத்தில் எந்த வித சமரசமும் செய்து கொள்ளாதவராக இருந்தார் என்பது அவர் பணியாற்றிய பங்குத் தளங்களில் வாழ்ந்த மக்களுக்கு நன்கு தெரியும். இவர் பல பங்குகளில் பணியாற்றியுள்ளார். அந்த பங்குத் தளங்களிலெல்லாம் அவர் மக்களோடு அந்நியோன்னியமாகப் பழகுவார். அந்தப் பங்குகளில் இருக்கக் கூடிய பல அடிப்படையான பிரச்சினைகளை அவர் அடையாளம் கண்டு தீர்த்து வைப்பார். அவர் திருமுழுக்கு யோவானைப் போல கரடுமுரடானவற்றை சமதரையாக்குகின்ற வேலைத்திட்டத்தை செய்வதற்கு மிகவும் தகுதி வாய்ந்தவராக இருந்தார்.

இன்று நான் நாவாந்துறைப் பங்குத்தந்தையாக இருக்கின்றேன். இவ்வாறு பங்குத் தந்தையாக இருந்து கொண்டு நான் சொல்லக் கூடியதாக இருக்கின்றது. இன்று பங்கில் அன்பிய குழும வாழ்வு வளர்ந்துள்ளது. பங்கில் இருந்து பல இடங்களுக்கு சென்று அன்பிய குழும வாழ்விற்கு சாட்சியம் பகர்கின்றவர்களாக நாவாந்துறைப் பங்கு மக்கள் இருக்கின்றார்கள். அங்கு அன்பிய ஒற்றுமை சமூக ஒற்றுமை வளர்ந்திருக்கின்றது. ஆனால் சில வருடங்களுக்கு முன்பு இந்த இடத்தை சிந்தித்தால் இந்த பங்கு பல பிணக்குகள், சண்டைகள் இடம் பெற்ற இடம் ஆனால் அவர் அந்த இடத்திலே கரடுமுரடானவற்றை சமதரையாக்கி ஒரு குழுமத்தை உருவாக்குகின்ற ஒரு அடித்தளமான கட்டுமான பணியைச் செய்தார் இதற்கு நாவாந்துறை பங்கு மக்கள் இன்று சான்று பகர்கின்றவர்களாக இருக்கின்றார்கள். அதே போன்று வலைப்பாட்டு பங்கில் அவர் இருந்த பொழுது அந்த இரணை தீவு மக்களுக்கு அவர் விடுதலையாளராக, ஒரு மீட்பராக செயற்பட்டு அந்த மக்களுக்கு முற்று முழுதான சமூகப் பொருளாதார அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து அவர்களைக் நிரந்தரமாகக் குடியேற்றி அவர்களுக்கு ஒரு புதுவாழ்வைக் கொடுத்தார் என்பது அங்குள்ளவர்களுக்குத் தெரியும்.


ஆகவே இவ்வாறு அவரது பணித்தளத்தைப் பார்க்கின்ற பொழுது ஆண்டவர் இயேசுவினுடைய இறையாட்சிப் பணி அந்த மக்களுக்கு எந்தெந்த திசையில் தேவைப்பட்டதோ அந்தந்தத் திசையிலே, அந்தந்த முறையிலே அந்தந்த அணுகுமுறையிலே அவர் அவைகளைச் செய்து அந்த பணித்தளங்களை அவர் ஆண்டவர் இயேசுவுக்குள்ளே உருவாக்கியிருக்கின்றார்.

இன்று நாவாந்துறையை நோக்குகின்றபோது திருப்பலி முடிந்த பின்பாக மக்கள் நெற்றியில் குருசு வேண்ட வருவார்கள். அவ்வாறு வருகின்ற பொழுது அவர்களுடைய நெற்றியிலே மண் காணப்படும் காரணம் என்னவென்று சொன்னால் தினமும் அவர்கள் நற்கருணைக்கு முன்பாக நெற்றி நிலத்தில் பட மண்டியிட்டு வணங்குவார்கள். இவ்வாறு நற்கருணைநாதருக்கு முன்பாக மண்டியிட்டு தங்களுடைய விசுவாசத்தை வளர்க்க இவர்களுக்கு அருட்தந்தை அவர்கள் வழிகாட்டியிருந்தார். இவ்வாறாக சென்ற இடமெல்லாம் மக்களை விசுவாசத்திலே திடப்படுத்தி அவர்களுக்குத் தேவையான சமூக அரசியல், பொருளாதார விடயங்களில் கவனம் செலுத்தி அந்த சமூகங்களை முன்னேற்றினார். இத்தகைய தன்னுடைய பன்முக ஆளுமையின் ஊடாக திருச்சபையின்பாலான தனது அன்பையும், அக்கறையையும் தொடர்ந்து வெளிப்படுத்தி வந்தார்.




எப்பொழுதும் ஆயருடைய வார்த்தையை தான் மீறக் கூடாது என்பதிலே கரிசனையாக இருந்தார். கேள்விகள் கேட்பார் பிரச்சனைகளை உருவாக்குவார் ஆனால் இறுதியில் ஆயருக்கு பணிவதென்பது தனது கடமை என்று பொழுதும் சொல்லுவார். அதனையே தன்னுடைய வாழ்விலும் கடைப்பிடித்தார். ஒரு போதும் அவர் தனித்தியங்க விரும்பவில்லை. மறைமாவட்டத்தோடு இணைந்திருந்து செயற்பட வேண்டும் என்பதிலேயே ஆர்வம் கொண்டிருந்தார்.


திருச்சபைக்கான தனது பணியின் முத்தாய்ப்பாக அவர் செய்ய விரும்பிய ஒன்று இருக்கின்றது. இம்மாதம் பன்னிரண்டாம் திகதி அவருடைய பிறந்த தினத்தன்று அவரோடு தொலைபேசியில் உரையாடிபொழுது அவர் ஒரு விடயத்தைச் சொன்னார். அவரிடம் இந்த நாட்களில் ஒரு ஆதங்கம் இருந்தது. ஒரு விதத்திலே தன்னுடைய மரணத்தை முன்னுணர்ந்தாரோ என்னவோ இந்த நாட்களில் அவர் தொலைபேசியில் பேசிய போது பலருடன் அவர் கதைத்த ஒரு விடயம் தன்னுடைய அந்தக் கல்வாரிப் பூங்காவைப் பற்றிய அங்கலாய்ப்பு. அவர் தன்னுடைய வாழ்வின் இறுதிக் காலங்களில் மிகத் தீவிரமாக வவுனிக்குளத்திலே தான் அமைத்த அந்தப் பூங்காவிலே செயற்பட்டார். அங்கு வயோதிபர் இல்லம் ஒன்றை அமைத்து வயோதிபரைப் பராமரிக்க வேண்டும், நல்லதொரு நூல் நிலையைத்தை அமைத்து ஆழமான ஒரு இறைதியான இல்லமாக அந்தப் பூங்காவை மாற்றி எதிர்காலத்திலே எமது மறைமாவட்டத்திலே பலரும் வந்து பயன் பெறும் இடமாக அதனை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற ஒரு நோக்கோடுதான் அவர் இயங்கிக்கொண்டிருந்தார். இருந்தாலும் அது நிறைவுறும் முன்பு அவர் மரணத்தைச் சந்திக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. ஆயினும் அவர் தனி மனிதரல்ல ஒரு மறைமாவட்ட குரு. ஆகவே அவருடைய கனவுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பது எம்முடைய நம்பிக்கை.



அந்த வகையிலே அவருடைய இரண்டு ஈடுபாடுகளும் அதாவது அவரது மக்கள் மட்டிலான ஈடுபாட்டினால் மலர்ந்த அந்த மனித உரிமைகள் செயலகமும் அதனால் ஏற்பட்ட நன்மைகளும் ஒரு புறமாக இருக்க அவர் திருச்சபையின் மேல் கொண்ட அன்பினாலே அவர் உருவாக்க விளைந்த அந்த தியான



இல்லம் அந்த கல்வாரிப் பூங்கா அவருடைய செயற்பாடு என்பன இன்னொரு புறமாக இருக்க அவர் ஒரு நல்ல மனிதராக மக்களை வழிநடத்துபவராக அதே வேளையிலே பல ஆற்றல்கள், திறமைகள் நிறைந்தவராக வாழ்ந்து தன்னுடைய வாழ்க்கையின் முடிவை விரும்பி எதிர்பார்த்து தீர்மானித்து இன்று தான் எதிர்பார்த்த அந்த இரத்த சாட்சியப் பேறைப் பெற்றுள்ளார். இது ஒரு பெரிய கொடை. இயேசுவுக்கு சாட்சியாகத் தான் மரணிக்க, மக்களுக்காக தான் மரணிக்க அவர் ஆவல் கொண்டிருந்தார்.



அவருடைய வாழ்வு எமக்குத் தரக்கூடிய பாடங்களைக் கற்றுக் கொள்வோம். அவர் திருச்சபையின் பாலும், இறையரசின் பாலும் தனது மக்களின் பாலும், அதீத ஆர்வம் கொண்டு தொடர்ந்தும் மக்களுடைய உரிமைகளுக்காகவும் திருச்சபையின் உயர்ச்சிக்காகவும், இறையரசின் மலர்ச்சிக்காகவும், உழைத்து வந்தார். அந்த வழியிலே நாமும் எமது அர்ப்பணத்தை ஆழமாக்கிக் கொண்டு திருச்சபையின் பாலும், இறையரசின் பாலும், மக்களின் பாலும் அதிக அன்பு கொண்டு அவற்றின் எழுச்சிக்காக உழைக்க முன்வருவோம்.

ஆகவே அவருடைய வாழ்விற்காக மட்டுமல்ல அந்த வாழ்வின் முடிவுக்காகவும் இறைவனுக்கு நன்றி சொல்லுவோம். இறைவன் அவருக்கு கொடுத்திருக்கின்ற இந்த உன்னதமான முடிவு அவரைப் பொறுத்த மட்டிலே ஒரு பெரிய வெற்றி. அவருடைய பிரிவு எங்களை வருத்தத்தில் வாட்டினாலும் அவருடைய முடிவு அவரது விருப்பப்படியே தான் அமைந்திருந்தது என்பதை உணர்ந்து கொள்வோம். அவருடைய வாழ்வு எமக்குத் தரக்கூடிய பாடங்களைக் கற்றுக் கொள்வோம். அவர் திருச்சபையின் பாலும், இறையரசின் பாலும் தனது மக்களின் பாலும், அதீத ஆர்வம் கொண்டு தொடர்ந்தும் மக்களுடைய உரிமைகளுக்காகவும் திருச்சபையின் உயர்ச்சிக்காகவும், இறையரசின் மலர்ச்சிக்காகவும், உழைத்து வந்தார். அந்த வழியிலே நாமும் எமது அர்ப்பணத்தை ஆழமாக்கிக் கொண்டு திருச்சபையின் பாலும், இறையரசின் பாலும், மக்களின் பாலும் அதிக அன்பு கொண்டு அவற்றின் எழுச்சிக்காக உழைக்க முன்வருவோம்.

அவரது ஆன்மா தெய்வீகப் பூங்காவில் நித்தியத்திற்கும் இளைப்பாற அவருக்காக மன்றாடுவோம், எமது திருச்சபைக்காக மன்றாடுவோம், எமது மக்களுக்காக மன்றாடுவோம். உரிமைகள் பேணப்படல் வேண்டும் இறையாட்சி மலர வேண்டும். திருச்சபை இறையாட்சியின் சாட்சியமாக மிளிர வேண்டும் என்றும் எல்லாம் வல்ல இறைவனிடம் வேண்டுவோம்.

அமரர் அருட்பணி கருணாரட்ணம் அவர்களுடைய அடக்க நாளாகிய 2008.04.22 அன்று யாழ் பேராலயத்தில் நடைபெற்ற இரங்கல் திருப்பலியில் அருட் பணி ம.வி.இ. இரவிச்சந்திரன் அவர்கள் ஆற்றிய மறையுரை



நீர் என்றென்றும் குருவே

எல்லோர்க்கும் எல்லாம் ஆகினேன் என்ற பவுல் அடிகளாரின் கூற்றுப்போல சிறியோர், பெரியோர், படித்தோர், பாமரர், ஏழைகள், செல்வந்தர் என்ற எல்லா நிலைகளையும் கடந்து பணித்தளத்தில் எலலாரையும் அரவணைத்துப் பணிசெயயும் அர்பணிப்புடையவர்.

அன்மையில் என்றென்றும் குருவாக அருட்தந்தை இயுஜின் கமில்ரனின் வாழ்க்கை வரலாறு (A Priest for ever: The life of Father Eugene Hamilton) என்ற புத்தகத்தை வாசித்தேன். இந்த புத்தகம் எனக்குள்ளே என் குருத்துவத்தைப் பற்றிய பல ஊற்றுக்களை அதன் அடிஅத்திவாரங்களை மிகவும் துல்லியமாக எனக்கு எடுததியம்பியது. இந்த வேளையிலேதான் அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளாரின் அகால மரணச்செய்தியும் என் காதில் எட்டியது. ஜீரணிக்க முடியாத ஒரு இழப்பு நெஞ்சில் ஓர் பாரிய சோகம். வாழ்வில் ஏற்படுகின்ற ஒவ்வொரு துன்பியல் நிகழ்வுகளும இழப்புகளும் எமக்குள்ளே பல கேள்விகளை ஏற்படுத்துகின்றன ஏற்படுத்தத்தான் வேண்டும்.

அருட்தந்தை இயுஜின் கமில்ரன் குருமடத்தில் உருவாக்கம் பெற்றுக் கொண்டிருந்த வேளையில் தீராத புற்று நோயினால் தாக்கப்பட்டார். அவரது மரணம் அவரை அண்மித்துக் கொண்டிருப்பது கண்கூடாகத் தெரிந்தது. இந்த வேளையிலே தான் ஓர் அர்த்தமுள்ள முடிவை மறைமாவட்டத்தின் அனுசரணையுடன் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரின் பெரும் தன்மை நிறைந்த அனுமதியுடன் குருமட நிர்வாகம் எடுத்தது. அதாவது அவர் மரணமடைவதற்கு முன்னர் அவருக்கு குருப்பட்டம் கொடுக்கப்படவேண்டும் என்று. இது எமக்கு ஓர் புரட்சிசிகரமான சிந்தனை போல தோன்றலாம். ஆனால் இது ஓர் புரட்சிகரமான முடிவு எனபதற்கு மேலாக இந்த முடிவுக்குள் பொதிந்துள்ள பேருண்மைகள் ஒரு குருவின் வாழ்வை புரிந்து கொள்ள எமக்கு பெரிதும் உதவுகின்றன.

கமில்ரன் திருநிலைப்படுத்தப்பட்டது குருத்துவம் தன்னகத்தே கொண்டுள்ள குருத்துவ பணிகளை செய்யவல்ல என்பது நம்க்கு வெள்ளிடை மலையாகத தெரிந்த விடயம். ஏனெனில் குருத்துவ அபிசேகத்தின் ஒரு சில கணங்களுக்குள் அவர் தன் ஆவியை ஆண்டவன் கையில் ஒப்படைக்கவுள்ளார். வழமை போன்று தன் சுற்றத்துடன் ஓர் நன்றிப்பலியை தன் முதற்பலியாக ஒப்புக்கொடுக்கப்போவதில்லை. அருட்சாதனங்கள் வழங்கப்போவதிவலை ஆண்டவரின் வார்த்தைகளை மேடைகளில் இருந்து முழுங்கப்போவதில்லை மக்கள் துயர் துடைப்புப் பணிகளைச் செய்யப்போவதில்லை.

அப்படி என்றால் பின் ஏன் தான் அவருக்கு குருத்துவ அபிசேகம் கொடுக்கப்பட்டது என்ற கேள்வி நம் மனதில் எழுவது இயல்பு. இங்கே தான் குருத்துவத்தின் சாராம்சம்

நம் கண்முன்னே வருகின்றது. கமில்ரனின் மரணம் ஒரு சில கணங்களில் உறுதியாகி விட்டநிலையில் கமில்ரனைப் பொறுத்த வரையில் அவர் குருவாக பணிசெய்வதற்கு (never to function) மேலாக மெல்கிசெதேக்கின் முறைப்படி என்றென்றும் குருவாக இருப்பதற்காக (to be priest forever after the Order of Melchisedeck) அழைக்கப்பட்டார்.

எனவே நமக்கு ஓர் பேருண்மை புலப்படுகின்றது. அதாவது குருத்துவம் என்பது ஓர் அருள்அடையாளம். ஒரு குரு தான் செய்கின்ற குருத்துவ பணிகளுக்கு முன்பாக அவரின் இருப்பு நமக்கு அருளின் வாய்க்காலாக அமைந்துவிடுகின்றது.

நாம் எந்தளவுக்கு பலவீனமானவர்களாக இருக்கின்றோமே அந்தளவுக்கு இவர்கள் நமக்கு தேவைப்படுகின்றார்கள் என்று குருத்துவ திருநலைப்படுத்தலின் போது சொல்லப்படுகின்ற செபம் இந்த உட்பொருளை நமக்கு தெளிவாகப் புரிய வைக்கின்றது. இந்த கண்ணோட்டத்திலே ஒவ்வொரு குருவும் எமக்கு ஓர் அருள் அடையாளம்.

அருட்தந்தை கருணாரட்ணம் இறைவனால் நமக்கு கொடுக்கப்பட்ட அருள் அடையாளம். அவர் வாழ்வு சடுதியாக நம்மிடையே இருந்து பறிக்கப்பட்டாலும் இறை பிரசன்னத்தில் அவர் என்றென்றும் குருவே. அவர் வாழ்வுக்காக அவரின் குருத்துவ அருள்அடையாளத்துக்காக நாம் பரம்பொருளுக்கு நன்றி கூறுகின்றோம்.

அதே வேளையில் அருட்தந்தையின் ஊடாக இறைவன் ஆற்றிய வல்லமை மிக்க செயல்களுக்காக நாம் நன்றி சொல்லவும் கடமைப்பட்டுள்ளோம். அருட்தந்தை அவர்கள் என்றும் கீழ்த்தட்டு மக்களுடன் தன் வாழ்வை பகிர்ந்த ஒருவர்.

எல்லோர்க்கும் எல்லாம் ஆகினேன் என்ற பவுல் அடிகளாரின் கூற்றுப்போல சிறியோர் பெரியோர், படித்தோர், பாமரர், ஏழைகள், செல்வந்தர் என்ற எல்லா நிலைகளையும் கடந்து பணித்தளத்தில் எலலாரையும் அரவணைத்துப் பணிசெய்யும் அர்பணிப்புடையவர்.

யாழ் மறைமாவட்டத்தின் ஒரு சில பணித்தளங்களுக்குச் செல்லுகின்ற போது அங்கே மக்கள் வந்து நம்மைப் பார்த்து கிறீஸ்துவுக்கு புகழ் என்று வாழ்த்தினால் அங்கே கிளி பாதர் சென்றிருக்கின்றார் எனபது அர்த்தமாகும். இவ்வாறாக தன் குருத்துவ இருப்போடு தனக்கென்ற ஓர் சொந்தப்பாணியில் குருத்துவப் பணியையும் செய்து வந்தவர்.

மேலும் குருத்துவம் என்பது மக்களின் ஏக்கங்களுடனும் கவலைகளுடனும் இரண்டறக் கலக்கப்பட்டுள்ளது என்பதன் அடிப்படையில் அவர் குரல் வளை நசுக்கப்பட்ட எளிய மக்களின் குரலாகவும் ஒலித்து ஓய்ந்துள்ளார்.

இவ்வாறான அவரின் குருத்துவ இருப்புக்காகவும் பணிக்காகவும் நாம் இறைவனுக்கு நன்றி நவில்கின்றோம். அவரின் இந்த அகால மரணம் அல்லது உயிர்பறிப்பு அவரின் பணியை நம்மிடம் இருந்து எடுத்தாலும் அவர் என்றென்றும் மெல்கிசெதேக்கின் முறைப்படி குருவாக இருக்கின்றார் என்ற குருத்துவ அடையாளம் நமக்கு ஆறுதவாக உள்ளது.

கிறீஸ்துவுக்கு புகழ்
அருட்பணி மனுவல்பிள்ளை டேவிட்
அமெரிக்கா




பணிகள் பற்றிய பார்வை

எங்கள் அன்புத்தந்தை ஆசான் எல்லோராலும் செல்லமாக கிளி பாதர் என அழைக்கப்படும் அருட்தந்தை எம்.எக்ஸ்.கருணாரட்ணம் அடிகளார் மல்லாவியில் கோழைத்தனமான தாக்குதலில் இன்று ஞாயிற்றுக்கிழமை (20.04.08) கொல்லப்பட்டு விட்டார்.

மிகுந்த வேதனை ஒருபுறமும் ஆத்திரம் இன்னொரு புறமும் இருக்க அதேநேரம் அவரின் பணிகளை நினைக்கும் போது அவற்றைத் தொடர்ந்து நாங்கள் முனைப்போடு அதில் ஈடுபடவேண்டிய கால கட்டமாகவும் இருக்கின்றது.

அவர் வெறும் பங்குத் தந்தையாக ஒரு குறிப்பிட்ட சமய மக்களிற்காக பங்காற்றவில்லை மாறாக எல்லா சமயத்தவர், அனைத்துப் பிரதேசத்து மக்களிற்கும் பங்காற்றியதுடன் மண்ணின் விடுதலைக்கும் மக்களின் சமூக விடுதலைக்குமாக மிகப்பெரிய பங்காற்றினார்.




போர் நெருக்கடியான காலப்பகுதிகளில் குறிப்பாக 1995, 1996 மற்றும் 1997 ஜயசிக்குறு காலப்பகுதிகளில் மிகக்கடுமையாக இரவு பகலாக பாதிக்கப்பட்ட மக்களிற்காகவும், மக்கள் துன்ப துயரங்களை வெளி உலகிற்கு கொண்டு வருவதற்கும் நன்கு உழைத்தார். சில சமயங்களில் தனது குரு முதல்வர், கோட்ட முதல்வர்களினதும் கண்டிப்புக்கள் மத்தியிலும் தனது சக்திக்கு மீறிய பணிகளை ஆற்றினார்.

1995 ஆம் ஆண்டில் இரணைமாதா நகர்ப்பகுதில் அவரது பங்கு இருந்தபோது அவர் இடம்பெயர்ந்த மக்களிற்கான பணியில் மிக ஆழமாக தன்னை ஈடுபடுத்தினார். அதனை தொடர்ந்து படிப்படியாக தனது கடமைகளை விரிவுபடுத்தி தனது கடைமைகளைச் செய்தார்.

போரினால் ஏற்பட்ட துன்பங்களையும், வடுக்களையும் ஆற்றுவதனை சந்தர்ப்பமாக கொண்டு பல்வேறு நிகழ்சித் திட்டங்களுடன் வரும் சர்வதேச நிறுவனங்களை இலகுவாக இனங்கண்டு அவர்களிடம் மிக இறுக்கமாக இருந்து அவர்களை எமது நிகழ்சி நிரலிற்கு ஏற்ப நகர்த்துவதில் அவர் சிறந்தவர்.

1998 ஆம் ஆண்டில் இருந்து அரச சார்பற்ற நிறுவனங் களின் இணைய தலைவராக இருந்து செயற்பட்ட அருட்தந்தை மிகவும் கண்டிப்புடன் அதேநேரம் பக்குவமாக சர்வதேச நிறுவனங்களை அணுகி மக்களிற்கான நிவாரணங்களை பெற்றுக்கொடுத்தது மட்டுமல்ல மக்களின் துன்ப துயரங்களை சர்வதேச நிறுவனங்களிற்கும் எடுத்துரைத்தார்.




அக்காலத்தில்தான் வெரித்தாஸ் தமிழ்ப்பணிக்கு வடபகுதி தொடர்பாளராகவும் பணியாற்றி மக்களின் துன்பங்களையும் போரின் தன்மைகளையும் வெளி உலகிற்கும் கிறிஸ்தவ உலகிற்கும் தெரிவித்துக்கொண்டு இருந்தார்.

தனது பங்கு மக்களிற்கான பணியுடன் தேச விடுதலைக்கான பங்கிலும் மிகத் தீவிரமாக உழைத்தது மட்டுமன்றி தனிப்பட்ட ரீதியிலும் போராளிகள் பொதுமக்கள், பொதுச்சேவை புரிவோர்கள் மத்தியிலும் தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டு அவர்களிற்கு, உளவியல், ஆங்கில மொழி, பொதுச்சேவை மக்கள் மத்தியில் எவ்வாறு பணிபுரிய வேண்டும் என தனக்கு நேரம் கிடைக்கும் போது எல்லாம் வகுப்பு எடுப்பார் அல்லது கதைத்துகொண்டு இருப்பார்.

1997, 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மல்லாவியில் அவர் வசித்து வந்த வீடு இப்போதும் நினைவுக்கு வருகின்றது.







நாங்கள் அடிக்கடி அவரிடம் சுகம் விசாரிப்பதற்காக செல்வோம். நன்றாக உணவு சமைத்து வைத்திருப்பார். உண்மையில் அதற்காகவே செல்வோம். அவரின் வீடு திறந்தே இருக்கும், நாங்கள் எங்கள் பாட்டில் சாப்பிட்டு விட்டு சென்று விடுவோம்.

அவரின் உணவு முறை, வீடு உட்பட அவரது வாழ்க்கை முறை சாதாரண மக்கள் போன்று இருக்கும் மழை நேரம் வீட்டிற்குள் தண்ணீர் நிற்கும் ஆனால் அதனைப்பற்றி பொருட்படுத்துவது இல்லை.

ஜயசிக்குறு காலப்பகுதியில் எரிபொருளுக்கு மிகுந்த தட்டுப்பாடு பெற்றோலுக்குப் பதிலாக வடி (மண்ணெய்யில் இருந்து ஆவியாக்கி வடிக்கப்படும் எரிபொருள்) அத்துடன் மண்ணெய்யும் கலந்து தனது மோட்டார் சைக்கிளிற்கு பாவிப்பார் ஆனால் கூடுதலாக நாங்கள் வீதியோரம் அவரை பார்க்கலாம் மோட்டார் சைக்கிளை ஸ்ராார்ட் பண்ணிக்கொண்டு இருப்பார் அல்லது உருட்டிக்கொண்டு செல்வார். ஏன் நான் இவற்றைக் குறிப்பிடுகின்றேன் எனில், கடமையை செய்வதற்காக அவர் வசதிகளையும் வளங்களையும் எதிர்பார்த்து இருந்தது இல்லை. அதேநேரம் அவர் கடமை நேரங்களில் நேரத்தினை மதித்துச் செயற்படுவார்.

எம் மத்தியில் இப்போதும் நாங்கள் நேர ஒழுங்கை கடைப்பிடிப்பதில்லை, அதற்கான காரணங்களை சொல்லிக்கொண்டு இருப்போம். ஆனால் அவரிடம் எந்தக்காரணங்களையும் கூறமுடியாது, இதனால் அவருடன் முரண்பட்டும் இருக்கின்றோம்.

வவுனிக்குளம் தேவாலயத்தில் தனது பூசைகளை கவனித்துக்கொண்டு மல்லாவி பங்கில் தனது பணிகளை 2002 ஆம் ஆண்டுவரை செய்து கொண்டிருந்தார். அந்த தேவாலயம் பலமுறை சிங்களப் படையினரின் தாக்குதலிற்கு உள்ளாகி இருந்தாலும் அதனை விட்டு அகலாது மக்களிற்கு நம்பிக்கையினை ஊட்டினார்.

தமிழீழ இயற்கை வளங்களை எவ்வாறு வளப்படுத்த வேண்டும், எவ்வாறு சிக்கனமாக எளிமையாக வேலை செய்யவேண்டும் என்பதற்கு அவரின் வவுனிக்குளம் பூங்கா அந்தக்காலப்பகுதியில் போராளிகள், பொதுமக்களிற்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது.

சமாதான காலப்பகுதியில் மக்களின் பாதிப்புக்கள் அவர்களின் உரிமைகள் தொடர்பாக வெளி உலகிற்கு கொண்டு வருவதுடன் மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்கும் அதன் செயற்பாடுகளை தாயகத்தில் சுதந்திரமாக செயற்படுத்துவதற்குமாக உருவாக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் அமைப்பின் தலைமைப் பொறுப்பினை இறுதியாக கையேற்று மிகவும் சிறப்பாக பணியாற்றினார்.

சமாதான காலப்பகுதியில் வருகை தந்த இராஜதந்திரிகள் மற்றும் மனித உரிமை நிறுவனங்களிற்கும் தாயகத்தில் மனித உரிமை செயற்பாடுகள் பற்றியும் சிங்கள அரசால் எம்மக்கள் மீது மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் தெரிவித்துக்கொண்டே இருந்தார்.

தாயக விடுதலைப் போராட்டமானது தனித்து மண் விடுதலை மட்டுமன்றி ஒட்டுமொத்தமான மனித சமுதாய விடுலையின் விழுமியங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது என்பதனை மேற்குலகிற்கு நிறுவுவதில் அவர் ஆற்றிய பங்களிப்புக்கள் இன்றியமையாதனவாக இருந்தன.

அவர் தான் சார்ந்த சபைக்காக உழைத்தார் என்பதனை விட விடுதலைப் போராட்டத்திற்காக உழைத்தார் என்றே கூறவேண்டும்.

சொல்லிலும், செயலிலும் எப்போதுமே ஒத்த தன்மையுடன் செயற்பட்ட அருட்தந்தையின் இழப்பு எமக்கு பேரிழப்பு. அவரின் செயற்பாடுகளை எமக்கு பாடமாகக்கொண்டு அவரது பணிகளையும் சேர்த்து முன்னெடுப்போம்.

-கே. பீ. அறிவன் -

நன்றி

இணையம்

மேலும் ஒரு கல்வாரி



கருணாரட்ணம் அடிகளாரின் கொலை இலங்கை அரசின் மனிதாபிமானமற்ற செயற்பாடுகளுக்கு மேலும் ஒரு உதாரணமாக அமைந்துள்ளது. விடுதலைப் புலிகளின் யுத்த அல்லது பொருளாதார இலக்குகளைத் தாக்குவது எவராலும் புரிந்துகொள்ளக்கூடியதாயிருக்கும். ஆனால், தனது வாழ்வையே ஒடுக்கப்பட்டோரை உயர்த்திவிடவும், ஒரு சிறுபான்மைச் சமூகத்தை புத்த சிங்கள மேலாதிக்க அரசு எப்படியெல்லாம் அடக்கி ஆளுகிறதென்பதை உலகுக்கு வெளிப்படுத்தியும் வாழ்ந்த ஒரு குருவை கொலை செய்வது எவராலும் புரிந்து கொள்ள முடியாத ஒன்று. எதேச்சாதிகார ஆட்சியாளரால் ஒடுக்கப்பட்டோரை மீட்பதே அவரது வாழ்வின் இலக்காயிருந்தது. இப்படியானவரை பற்றைக்குப்பின்னிருந்து கொல்லுவது எவ்வளவு கோழைத்தனமானது. ஏனெனில் அவர் அகிம்சையை தனது வாழ்விலும் போதனையிலும் கடைப்பிடித்து, மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு தனது வாழ்வையே அர்ப்பணித்த ஆயுதமேந்தாத ஒரு குரு அவர்.




கால் நூற்றாண்டுக்கு மேலாக அவர் மனித உரிமைச் செயற்பாடுகளுக்காகத் தன்னைக் காணிக்கையாக்கியிருந்தார். அரச சார்பற்ற அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவராக அவர் இருந்தார். வெரித்தாஸ் வானொலிச் சேவைக்கு அவர் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. வடக்கு-கிழக்கு மனிதஉரிமைப்பணியகத்தை அவரே அமைத்துத் தலைமைதாங்கி நடத்தினார். அப்பணியகத்தின் தொடக்க கர்த்தாக்கள் மேலும் மூவர் கொல்லப்பட்டனர். முதலாவது அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. சந்திர நேரு, அடுத்தது. நத்தார் முன்னிரவு தனது பாரியாருடன் கோவிலில் செபித்துக் கெண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்ட



பாராளுமன்ற உறுப்பினர் திரு யோசப் பரராசசிங்கம். மூன்றாவது சட்டத்தரணி திரு சிவபாலன். எனவே அப்பணிமனை தனது நிறுவுனர்களில் நால்வரை இழந்துள்ளது.




அருட்தந்தை கிளி இலங்கையினுள் மட்டுமல்ல, பன்னாட்டரங்கிலும் மனித உரிமைகளுக்காக பல வழிகளில் குரல்கொடுத்துள்ளார். அவர் ஐக்கிய அமெரிக்கா, சுவிற்சலாந்து, கனடா ஆகிய நாடுகளில் வெளிநாட்டமைச்சினதும் மனித உரிமை அமைப்புகளினதும் அதிகாரிகளைச் சந்தித்து இலங்கை ஆயுதப்படையினராலும் அவற்றின் ஒட்டுக் குழுக்களாலும் புரியப்படும் கொடுமைகளையும் மனித உரிமை மீறல்களையும் தெரியப்படுத்தினார். அவர் பன்னாட்டரங்கில் எவ்வளவு மகத்தான பணியாற்றியுள்ளார் என்பதற்கு உலகின் எல்லாப்பாகங்களிலிருந்தும் வந்து குவிந்துகொண்டிருக்கும் இரங்கற் செய்திகளே சான்று.



இன்று நோர்வேயிலுள்ள எமது நண்பர் ஒருவர் ஒரு தொலைநகல் எனக்கு அனுப்பியிருந்தார். அதில் அவர் ஒரு நிகழ்வை விபரித்திருக்கிறார். அதைக் கீழே பிரதிபண்ணுகிறேன்.
வவுனிக்குளத்திலுள்ள தனது தோட்டத்தில் ஒரு உணவுக்காக அருட்தந்தை கிளி என்னை அழைத்திருந்தார். அங்கு அவர் தனது வாகன ஓட்டுனரையும் எம்மோடிருந்து உணவருந்த வற்புறுத்தியது எனக்கு வியப்பளித்தது. அவர் எவ்வளவுக்கு தனது நாளாந்த வாழ்விலும் மனித உரிமைகளைக்கடைப்பிடித்தார் என்பதை உணர்த்தியது. இலங்கையில் இது வழக்கத்துக்கு மாறானது. ஏனெனில், சாதாரணமாக, ஓட்டுனர்கள் தாம் செலுத்தும் வாகனத்தின் ஒரு பாகமாகவே





கருதப்படுகின்றனர்.

அவர் தன் சக மனிதனை எப்படி நடத்தினார் என்பதற்கு அது ஒரு வலுவான எடுத்துக்காட்டாகும் இலங்கை அரசுக்கு குருக்களைக் கொல்லுதல் கைதேர்ந்த கலை. கடந்த காலத்தில் பின்வரும் குருக்கள் அவ்வரசின் மிருகத்தன்மைக்கு பலியாகியுள்ளனர்.

அருட் தந்தை தி. நிகால் ஜிம்பிறவுண் அல்லைப்பிட்டி, 20-08-2006, கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்

அருட் தந்தை நீ. பாக்கியரஞ்சித், வெள்ளாங்குளம், 26-09-2007, கிளைமோர்

அருட் தந்தை ச. எதிரிசிங்கி, அம்பாறை, 17-02-2008, சுட்டுக்கொல்லப்பட்டார்



அருட் தந்தை ம. சே.கருணாரட்ணம், வவுனிக்குளம், 20-04-2008, கிளைமோர்

இந்த யுத்தத்தில் பல இந்துக் குருக்களும் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் கொடுரத்தன்மைளை எடுத்துக்காட்ட ஒரு நிகழ்வு. 1983 ஆடி இனக்கலவரத்தின்போது களுத்துறையில் ஒரு இந்துக் குரு தனது கோவிலிலிருந்து வெளியே இழுத்து வரப்பட்டு பெற்றோல் ஊற்றி உயிருடனேயே எரியூட்டப்பட்டார். அந்நேரம் நூற்றுக்கணக்கான சிங்கள மக்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

இயற்கையோடு அவருக்கிருந்த உறவு ஒரு சிலருக்கே தெரியும். ஆதன் ஆழத்தைப் புரிந்துகொள்வதற்கு வவுனிக்குளத்தில் அவர் வாழ்ந்துகொண்டிருந்த அவருடைய தோட்டத்திற்கு வருகைதரவேண்டும். அவ் அழகான சூழலில் ஒரு சில வார இறுதி நாட்களை அவருடன் செலவிட எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. ஒரு காட்டுப்பகுதியை அவர் வனப்பு மிக்க ஒரு தோட்டமாக மாற்றியிருந்தார். அங்கே பல பழமரங்களும் பூச் செடிகளும் நிறைந்திருந்தன. பல கொடி இனம் இயல்பாகவே வளர விடப்பட்டிருந்தன. புள்டோசரால் ஒரு சிறிய குளத்தை அமைத்து தோண்டப்பட்ட மண்ணைப் பாவித்து ஒரு அழகிய குன்றை அமைத்து அதில் பல வகை மருந்துச்




செடிகளை நட்டிருந்தார். நான் இமாலயத்தில் இருப்பதைப் போன்ற உணர்வை அது எனக்குத் தந்தது.
தனது தாயாரின் புதைகுழிக்கு அவர் மிக முக்கிய இடத்தை ஒதுக்கியிருந்தார். ஒரு திறந்த கோவிலாக அது எனக்குக் காட்சி தந்தது. அங்கே ஒருவிதமான விண்ணகத் தொடசல் இருந்தது. முதல்முறையாக அவர் என்னை அழைத்துச் சென்றது இன்றும் ஞாபகமாக இருக்கின்றது. அங்கே அமைதியில் அமர்ந்திருந்தோம். அந்த கனதியான சூழலில் நிலவிய ஆழமான அமைதியை ஒரு சிறு இலையின் சரசரப்பக்கூட குழப்பாத அளவுக்கு அமைதி நிறைந்ததாயிருந்தது. அங்கு நிலவிய அமைதிக்கு நான் செவிமடுப்பதாக உணர்ந்தேன். நான் ஒரு இந்துவாயிருந்தும் அச் சூழலின் புனித அமைதியை உண்மையாகவே விரும்பினேன்.

நாமிருவரும் ஒரே அலுவலகத்தில் ஒன்றாக பணியாற்றியபோது ஏனைய பணியாளர்கள் மட்டில் அவரின் அணுகுமுறையை அவதானித்தேன். எப்பொழுதாவது ஒருவரோடு கதைக்க வேண்டியிருப்பினும், ஒரு தகவலைப் பெறவேண்டியிருப்பினும் அல்லது ஒரு விடயத்தைப் பெறவேண்டியிருப்பினும் சம்மந்தப்பட்ட அறைக்குத் தானாக எழுந்து சென்று மிக மரியாதையான முறையில் தனது தேவையைத் தெரியப் படுத்துவார். ஒரு அறிக்கையோ, ஒரு புள்ளி விபரமோ அன்று மாலை தேவைப்படும் பட்சத்தில், இன்று மாலை இவற்றை பெற முடியும் என நீர் கருதுகிறீரா? என்று மிக மரியாதையாகக் கேட்பார். தன்னுடைய அன்பையும், கருணையையும் தன் உடன் பணியாளர்கள் மேல் பொழிந்து அவர்களுடைய அன்பையும், ஆதரவையும் பெற்றிருந்தார்.

பலருடைய கருத்தின்படி, கிளி பாதர் ஈடுசெய்யப்பட முடியாதவர். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் கிளிபாதரை ஈடுசெய்யக் கூடிய ஒரேயொருவர் கிளிபாதர் தான். அவர் என்றும் எம்முடன் இருந்து தனக்கே உரித்தான பாணியில் எம்மை வழிநடத்துவார் என நம்புகின்றேன். அவருடைய பிரசன்னம் எப்பொழுதும் வன்னி மண்ணில் நினைவு கூரப்பட்டு வாழும் ஒருவராக கருதப்படுவார்.

அன்புத் தந்தையே, உங்களது திடீர் மரணம் என்னை ஆழ்துயரத்தில் அமிழ்த்தினாலும் உங்களுடைய நினைவுகளில் எனது துன்பத்தை சுவைக்கின்றேன். இது உங்களுடைய பிரசன்னத்தை எனக்கு உணர்த்துவதாகவே உள்ளது. எப்பொழுதும் நீங்கள் என்னைப் பார்த்து மயில் ஐயா என அழைக்கும் ஓசை என் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

கே. மயில்வாகனம்.



பங்குத் தந்தையை நினைத்து

நாவாய் மக்களின் ஏரவரிகள்

நாவாந்துறைப் பங்கு வந்து எம்மை முதல் தரிசித்த எங்கள் தந்தையே. இறை விசுவாசத்தை எமக்கு ஊட்டிய ஞானக்குருவே விசுவாச வாழ்வு எமக்கு ஊட்டிய குருவே.
அன்றொருநாள் சேமக்காலையில் திருப்பலி ஒப்படைக்க ஆயத்தமான வேளையில் வானம் எங்கும், கருமுகில் கூடி குளிர்காற்று வீசி மழை வரும் நேரத்தில் புதைகுழி நடுவே முழந்தாளிட்டு வானத்தை நோக்கி இரு கைகளையும் உயர்த்தி ஆண்டவரே எம்மைக் காப்பாற்றும் என்று கதறி அழுது நிலத்தில் விழுந்து ஒலமிட்டு உடனே காற்றையும் மழையையும் அகலச் செய்த தெய்வமே.
ஏழைகளுக்கு உதவிகள் புரிந்து இறைவனின் நற்செய்தியை அறிமுகஞ்செய்து மனனம் செய்ய வைத்த தேவதூதரே உங்கள் பிரிவால் வருந்துகின்றோம், அலறுகின்றோம். தேவ சன்னிதானத்தை நோக்கி கூக்குரல் இடுகின்றோம். எம்மைக் காத்தருளும் தந்தையே.

சு.மலக்கியாஸ்

நாவாய் மண்ணில் அன்னை மரியாளின் மகிமையை வெளிப்படுத்த ஒன்பது சேனையை உருவாக்கி எம்மோடு தோளோடு தோல் கொடுத்து மரியாளுக்கு ஊழியம் செய்ய ஊக்குவித்த அன்புத் தந்தையை என்றும் மறவோம்.

தோமாஸ் அருந்தவநாயகி

எங்கள் வீட்டில் கிறிஸ்துவுக்குப் புகழ் என்னும் வார்த்தையை எங்கள் குடும்பங்களின் நிலை தரிசிப்பின்போது பரிசுத்த வேதாகமம் வாசித்தால் வீட்டில் ஒளி பிறக்கும் என நாள்தோறும் கூறிவருவார் அவர் காட்டிய பாதையில் நாமும் நடப்போம்.

அரியம் சாந்தி

தினம் தோறும் அதிகாலையில் ஆண்டவரின் பிரசன்னத்தை ஏற்படுத்தி ஆண்டவரோடு எங்கள் மனங்களை சங்கமிக்க செய்தவரும் வாருங்கள் நம் ஆண்டவர் புகழ்தனைப் பாட என்று எம்மை ஆலயங்களில் அழைத்த தந்தை எம் நெஞ்சங்கங்களில் நீங்காத நினைவலைகளாக வாழ்கின்றார்.

இயுஜின் அஞ்சலா

கிறிஸ்துவுக்குப் புகழ் கூறி புன்னகையுடன் எம்மை வரவேற்கும் தந்தை கிறிஸ்தவர் நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்று அன்பியங்களுக்கூடாக எமக்கு கற்பித்து வீசிச் சென்ற கரங்களிலே வேதாகமத்தை ஏந்தச் செய்தார்.

தா. ரேகா

கருணை உள்ளம் கொண்ட கருணாரட்ணம் அடிகளாரே கயவரின் குண்டடிக்கு பலியாகி எம்மைப் பிரிந்தது ஏன் ஐயா?
கிளி பாதர் என நாம் உம்மை அன்போடு அழைத்து மகிழ்தோம் கீழோர் மேலோர் எனப்பார்த்து சேவை புரிந்த செம்மலே குன்றாக்குலமாகத் தமிழ்மக்கள் வாழ வேண்டுமென்றீர் கூவித்திரிந்த குயில் இன்று ஏன் விட்டு விலகியது. கேட்ட உலகில் வாழப் பிடிக்காது பரமன் பாதம் சென்று விட்டீர்.கேள்வி ஞானத்தால் அனைவர் மனங்கவர்ந்த செம்மலே கொடுங்கோன்மைக்கு எதிராக குரல் கொடுத்துத்திரிந்த உத்தம அடிகளாரே.
கோமகன் மனுமகன் யேசுவின் பாதத்தில் நீர் சங்கமமமாவது நிஜம் கௌரவமான உம் பாதையை நாம் பின்பற்ற ஆசி தாரும்.

கருணாரட்ணம் அடிகளார் எம் பங்கில் வாழ்க்கை எமது விசுவாச வாழ்வில் இன்னோர் ஆபிரகாமாகவும் எம் குறைகளை சுட்டிக் காட்டித் தட்டிக் கேட்கும் போது நவீன யோவானாகவும், பின்தங்கிய எம் வாழ்விலிருந்து எம்மை மீட்ட போது மோயீசனாகவும் தெரிந்த அவர் உண்மைக்காக தன் உயிரை கொடுத்து இப்போது உத்தமன் இயேசுவின் சீடன் என்பதை உணர்த்திவிட்டார்.

ஞா. தமிழ்ச்செல்வி

வலய ரீதியாக திருப்பலி வைத்து அன்பியத்தை உருவாக்கி எம் பங்கு இப்போது அன்பிய வளர்ச்சியடைய காரணமும், நோயாளிகளின் வீடுகளில் திருப்பலி வைத்து ஆசி வழங்கியதும் எம் தந்தைதான்

ப.இராஜேஸ்வரி

எம் பங்குத்தந்தையினால் தான் எம் பங்கில் ஒரு மாற்றம் வந்தது. எம் பங்கில் நீண்டகாலமாக இருந்த பகையை நீக்கி நிறைந்த அமைதியை நிலை நாட்டிச் சென்ற நிகழ்வை என வாழ்வில் மறக்க முடியாது.

ஞ. நொலஸ்கோ

ஊருக்கும் சமாதானம், ஆலயத்திற்கு பைபிள் கொண்டு செல்லும் பழக்கம் அதை வாசிக்கின்ற முக்கியதத்துவத்தையும் வெளிப்படுத்தினவர் ஆவார். பங்கில் இருந்து சென்றதன் பின் தவக்கால சிந்தனைகள் குறைவாகி விட்டன. தான் எடுக்கும் முடிவு தான் சரியென உணர்வும் அவரிடத்தில் காணப்பட்டது.

அ. பாக்கியநாதர்

பங்கின் முன்னேற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்தவரே மரண வீடுகளின் வீணான ஆடம்பரங்களை குறைந்தது (பப்பாச்சி மேளம்) அவர்களின் துக்கத்தை ஆன்மீக ரீதியாக செயற்பட வைத்தவர். போர்க்கால சூழ்நிலையிலும் மறை பரப்பும் முகமாய் கோட்டைப் பகுதியில் அந்தோனியார் ஆலயம் ஸ்தாபித்தது மறக்க முடியாத செயற்பாடு.

சிலுவைதாஸ்

குருவும் பலியும்





பலிப்பொருளானார்

அமரர் வணபிதா ம. சே. கருணாரட்ணம் அடிகளாரைச் சிறிய குருமடத்தில் நான் இருந்த காலத்தில் இருந்தே நன்கு அறிந்திருந்தேன். அவர் எமது குடும்ப நண்பர். அவரின் குடும்பத்தினருக்கும் எமது குடும்பத்தினருக்கும் இடையில் நீண்டகால உறவு உள்ளது. அவரின் ஆழமான, சுவையான உரையாடல்கள், கதைகள் கேட்டோரிடம் இலகுவில் அவரில் ஒரு ஆச்சரியமான நிலையான ஈர்ப்பினை ஏற்படுத்திவிடும். ஒருமுறை அவருடன் கதைத்தால் போதும் மீண்டும் அவருடன் கதைக்கத் தூண்டும். அவ்வளவு ஆழம் அவரின் கதைகளில் இருக்கும். அதேவேளை அவரை ஞாபகம் வைத்திருக்கும் அளவு தீர்க்கமானதாக இருக்கும். எந்த விடயத்தைப் பற்றியும் எவ்வேளையிலும் பேசும் திறன் அவரிடம் காணப்பட்டது. பழகுவதற்கு இனியவர். எவரையும் உடன் வரவேற்று உதவும் தாராள தயாள குணமுள்ளவர்.

நிறைந்த அறிவு உள்ளவர். நிறைய புத்தகங்கள் வாசிப்பார். புதிய விடயங்களை பலவழிகளிலும் இலகுவாகக் கற்றுவிடுவார். புத்தகங்களை வாசித்து உடன் அவைபற்றிய கருவை சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறக்கூடிய திறன் இருந்தது. கிரகிக்கும் ஆற்றல் அதிகம். கூர்மையான அறிவு. நுண்ணிய அவதானம். தசாவதானி என்று கூறக்கூடியளவிற்கு அவதானிப்பும் அறிவும் ஞாபகசக்தியும் அவரிடம் இருந்தன.

அரசர்களுடனும் ஆட்சியாளர்களுடனும் ஒருங்கே அமர்ந்து பேசக்கூடிய திறனும், இணைந்து செயற்படக்கூடிய ஆற்றலும் உள்ளவர். அதேவேளை ஏழைகள் மட்டில் அளவுகடந்த இரக்கம் உள்ளவர். அவர்களுடன் இணைந்து நடக்கக் கூடியவர்.

ஆழமான ஆனால் செயலோடு கூடிய, நடைமுறை வாழ்வோடு கலந்த, இறைவிசுவாசம் அவரிடம் காணப்பட்டது. அது அவரின் விசுவாசம் நிறைந்த பெரிய குடும்பத்திலிருந்தும் நீண்ட பாரம்பரிய கத்தோலிக்க கிறிஸ்தவ சமூகத்திலிருந்தும் முகிழ்ந்தெடுக்கப்பட்டதாகும்.

குருத்துவத்தை 38 வயதில் பெற்றாலும், தனது முழுமையான சேவையை இறைவனுக்குக் கொடுக்க முன்வந்தார். குறைந்த ஆண்டுகள் ஆனாலும் பூரணமாகப் பணியாற்ற வேண்டும் என்ற ஆர்வம் மிக்கவராக இருந்தார். அதற்காக ஓய்வின்றி உழைத்தார். அயராது பாடுபட்டார். பல புதுமைகளைப் பங்குகளில் கொண்டுவந்தார். அவரின் பங்குகள் எப்போதும் கலகலப்பாக இருக்கும். பல புதிய உத்வேகமான செயற்பாடுகளையும் கத்தோலிக்க பாரம்பரியங்களையும் தமது பங்குகளில் புகுத்தினார். பங்கு மக்களின்

சமய, சமூக, பொருளாதாரத் தேவைகளைக் கவனத்தில் கொண்டு அவற்றை நிறைவேற்றினார். சாதாரணமாக ஐந்து ஆண்டுகள் ஒரு குரு ஆற்றக்கூடிய பணிகளை ஐந்து மாதங்களில் நிறைவேற்றக் கூடிய வலிமை கொண்டவராக இருந்தார். மக்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் பட்சத்தில் அவரின் பணி மிகவும் சிறப்பானதாகவும் உயர்வானதாகவும் ஒப்பற்றதாகவும் காணப்பட்டது.




பெரும் புகழையோ பட்டத்தையோ விரும்பியவர் அல்ல. கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ளவும், அவரோடு ஒன்றித்திருக்கவும், அனைத்தையும் குப்பையெனக் கருதுகிறேன் (பிலி,3.8) என்ற புனித சின்னப்பரின் வார்த்தைகளை அடிக்கடி கூறுவதுடன், அதனையே தன் தாரக மந்திரமாகக் கொண்டிருந்தார். கிறிஸ்துவுக்காக தனது வாழ்வை முழுமையாக அர்ப்பணித்த உண்மையான, நீதியான, கலப்படமற்ற ஊழியன். ஏழைகளுக்காக, ஒடுக்கப்பட்டோருக்காக, ஓங்கிக் குரல் மட்டுமல்ல, உடலையும் உயிரையும் கொடுத்த உத்தமர் கிறிஸ்துவின் பணியாளன். இறைவனுக்கு ஒப்புக் கொடுக்கப்படும் தனது பலியில் தனது தசையையும் இரத்தத்தையும் கலந்தவர். கிறிஸ்துவின் கல்வாரிப் பலியை தனது வாழ்வாக்கி, அதனை நிஜமாக்கி, தன்னையே பலியாக்கி, குருவும் பலிபொருளும் பலிப்பீடமுமான கிறிஸ்துவின் குருத்துவத்துடன் தன்னை முழுமையாக ஒன்றாக்கி, தன்னைக் கரைத்துவிட்டவர்.

இயேசுவின் வாழ்வு எங்களில் வெளிப்படும்படி, போகுமிடமெல்லாம் இயேசுவின் மரணப்பாடுகளைத் தாங்கிச் செல்கிறோம் (2 கொரி,4.10) என்றவாறு கிறிஸ்துவின் மரணத்துடன் இரண்டறக் கலந்து விட்டவர். கிறிஸ்துவை முகமுகமாகக் காணும் பேறுபெற்றவர். இறைவனுடன் நித்தியமாகிவிட்டார். இனி எமக்காகப் பரிந்து பேசுவார். அவரை நேரடியாகக் காணும் பாக்கியம் இனிமேல் இவ்வுலகில் எமக்கில்லை. ஆயினும் அவரைக் காணுமட்டும் அவரின் நினைவுகள் எம்மை வழிநடத்தும். அவரின் வாழ்வு, உழைப்பு, பணி, அர்ப்பணிப்பு எமக்கு உரமூட்டும். அவரின் பரிந்துரைகள் எமக்கு உதவும்.

அவரின் இனிய ஆன்மா இறைவனில் நித்திய அமைதிபெற இறைவனிடமே வேண்டுகிறேன்.

வணபிதா. க. ஜேம்ஸ் சிங்கராயர்,
இளவாலை.



கிளி அண்ணா

சில நினைவுக்குறிப்புக்கள்

ஞாயிற்றுக்கிழமை காலை அக்கா தொலைபேசியில் கூப்பிடுகின்றா. கிளியண்ணா...கிளைமோர் ஓண்டில... அதன் பின் நீண்ட மௌனம். யாரோ ஆயிரம் சம்மட்டியால் ஓங்கி அடிக்கின்றார்கள். தொண்டைக்குள் ஏதோ அடைத்துக் கொள்கின்றது.

கிளியண்ணா இறந்து போய் விட்டார். இனி கரகரப்புடன் கூடிய அந்தக் குரல் கேட்காது. நிலவரம் நிகழ்ச்சியில் அவர் வரப் போவதில்லை. ஊடகங்களில் அவரது ஆன்மீகப்பணி பற்றியும், மனித உரிமைகள் தொடர்பான பணிகள் பற்றியும் பேசுகிறார்கள். அறிக்கைகள் வருகின்றன. நாடுகள் கண்டனம் செய்கின்றன. அவருடைய பிரமாண்டம் எனக்குப் புரிகின்றது. ஆனால் ஒரு சாதாரண மனிதராக, சகோதரனாக எனக்குத் தெரிந்த கிளியண்ணாவின் பக்கம் ஒன்றும் இருக்கிறது.

அவர் எனக்கு அப்பாவின் நண்பராகவே அறிமுகமானார். பின்னிரவில் இருவரும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிரப்பதைப் பார்த்திருக்கின்றேன். அவர்கள் என்ன பேசினார்கள் என்பதெல்லாம் இப்போது ஞாபகமில்லை. அப்போத அவர் ட்யூட்டரிகளில் பிரபலமான ஆங்கில ஆசிரியராக இருந்தார். பிறகு சில காலம் பருத்தித்துறையிலுள்ள இலங்கை வங்கியில் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

ஒருநாள் அப்பா புதிய ஒரு தகவலுடன் வந்தார். 'கிளி அண்ணா பாதராகப் போறாராம். எனக்கு அது ஆச்சரியமாக இருந்தது.

சிறுவயதிலேயே குருத்துவக் கல்லூரிக்கு போய் குருவாக வந்தவர்களைத் தான் எனக்குத் தெரிந்திருந்தது.

வங்கியில் பணியாற்றிக் கொண்டிருந்த கிளியண்ணா குருவாக வருவதற்காக குருத்துவக் கல்லூரிக்குப் போகப் போகிறார் என்பது ஆச்சரியமாகத் தான் இருந்தது.

பின்பு நீண்ட நாட்களுக்குப் பின் அவரடன் இரண்டு மூன்று மாதங்கள் ஒன்றாக, ஒரே அறையில் இருக்க வேண்டி வந்தது. அப்போது ஒரு அருட்சகோதரனாக அவர் இளவாலையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அந்த நாட்களில் இந்திய இராணுவத்திற்குப் பயந்து பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருவதில்லை. மின்சாரம் இல்லை. தொலைக்காட்சி கிடையாது. அவருடன் பேசுவதே எனக்கான ஒரேயொரு பொழுது போக்காக இருந்தது. அவர் மிக எளிமையான ஒரு மனிதராக எனக்குத் தெரிந்தார்.

அதுவரை மிடுக்காக உடையணிந்து மோட்டார் சைக்கிளில் வங்கிக்குப் போகும் கிளியண்ணா. ஒரு அதிகாரி போன்ற பிம்பத்தையே எனக்கு உண்டாக்கியிருந்தார். அதற்கும் இப்போதிருக்கும் துறவிக்கும் எந்தத் தொடர்பும் தெரியவில்லை.

அவரடைய ஆங்கிலப் புலமை அதிகமானது. ஆங்கில அகராதியை அவர் மனனம் செய்து வைத்திருக்கின்றாரோ என அடிக்கடி எண்ணத் தோன்றும். எமக்குத் தொடர்பில்லாத சொற்களைக் கூட அவர் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தார். துறைசார்ந்த சொற்கள்க்கூட அவருக்குத் தெரிந்திருந்தது.

இன்னோர் விடயத்திலும் அவர் எனக்கு ஆச்சரியமூட்டினார். அவருக்கு இரண்டு கைகளாலும் எழுத வந்தது. கொப்பியில் இடது புறம் இடது கையாலும் வலது புறம் வலது கையாலும் எழுதுவார். இரண்டு பக்கங்களிலுமுள்ள எழுத்துக்களுக்கும் வேறுபாடு இருக்காது.

மரணம் அவரை (எனக்குத் தெரிந்தது) இரண்டு தடவை முகர்ந்து பார்த்து விட்டு சென்றிருக்கிறது. 84இல் ஒரு நாள் கிளியண்ணா மினிவான் ஒன்றில் பயணித்துக் கொண்டிருக்கின்றார். முதல் நாள் ஏதோவொரு தாக்குதல் நடந்திருக்க வேண்டும். திடீரென வானுக்கு முன் ஒரு கவச வாகனம் தோன்றுகின்றது. கவசவாகனத்தின் மேலிருக்கும் பெரிய துப்பாக்கி சுடத் துவங்குகிறது. வாகனத்தில் இருந்தவர்கள் சிதறி ஓடுகின்றார்கள்.

கிளியண்ணாவிற்குக் கழுத்திலும் தோள்பட்டையிலும் பலத்த காயம். வீழ்ந்த கிடந்தவரை இராணுவத்தின் கவசவாகனத்துக்குள் தூக்கிப் போடுகின்றார்கள். கவச வாகனம் முகாமை நோக்கி ஓடத்தொடங்குகின்றது.

கவச வாகனத்தில் ஓட்டுனரின் பகுதி தனியாக இருக்கும். பின்புறத்தில் கிளியண்ணாவுடன் ஒருவன் மாத்திரமே உட்கார்ந்திருக்கின்றான் துப்பாக்கியுடன் வாகனத்தின் மேலே ஒருவன் இருக்கின்றான்.

கிளியண்ணாவால் நகரமுடியவில்லை. இரத்தம் ஓடிக்கொண்டிருக்கின்றது. ஆனால் நினைவிழக்கவில்லை. அருகேயிருந்த இராணுவத்தினன் இவரின் பைகளைப் பரிசோதிக்கின்றான் அவருடைய செபமாலையை காண்கின்றான். அவர் சொன்னபடி அது அவனுக்குள் ஏதோவொரு மாற்றத்தை உண்டாக்கியிருக்க வேண்டும்.

இவரிடம் குனிந்து ''கண்களை மூடிக்கொண்டு அசையாமல் படுத்திரு'' என்கின்றான். பின் கவச வாகன ஓட்டுனரிடம் ''இவன் இறந்து போய் விட்டான்''. இவனை எறிந்து விட்டுப் போய்விடலாமா? என்கின்றான். ஓட்டுனருக்கும் அது சரியாகப் பட்டிருக்க வேண்டும்.

வாகனத் தொடரணி நிற்கின்றது. வேறொருவன் வந்து இவரின் காலைப் பிடித்து இழுத்து வெளியே எறியப் போகின்றான்.

அருகே உட்கார்த்திருந்தவன் அவனைத் தடுத்துவிட்டு இவரைத் தூக்கிச் சென்று அருகிலிருந்த பற்றையொன்றுக்குள் கிடத்துகின்றான். இவரின் தலையில் முள் குத்திவிடக் கூடாது என்பதற்காய் இவருடைய செருப்பைக் கழற்றி இவருடைய தலைக்குக் கீழே வைக்கின்றான். இவருடைய தோளில் இலேசாக விடை கொடுப்பது போலத் தட்டிவிட்டு போய் விடுகின்றான். கவச வாகனத் தொடரணி புறப்படுகிறது.

அவர் அசைய முடியாது படுத்திருக்கின்றார். அந்த வழியால் போனவர்கள் இவரைக் கண்டு உயிர் இருக்கிறது என ஆச்சரியப்பட்டு மருத்துவமனையில் சேர்ப்பிக்கின்றார்கள்.

இதனிடையே வானில் சென்றவர்கள் கிளியண்ணாவை இராணுவம் சுட்டுக் கொன்று விட்டதாக ஊரில் வந்து கூறுகின்றார்கள். அவருடைய தாயார் வைத்தியசாலைக்கு ஓடுகிறார். பிணவறையில் மகனைத் தேடிஅழுது கொண்டிருந்தவருக்கு. அவர் வாட்டில் இருப்பதாக ஒரு மருத்துவர் கூறுகின்றார். (எப்படியிருந்திருக்கும்) மரணம் அவர் அருகே வந்து சென்றிருக்கின்றது.

இதை அவர் இளவாலையில் இரண்டு மூன்று தடவை கூறக் கேட்டிருக்கின்றேன். அது மற்றவர்களுக்கு நம்பிக்கையூட்டும் ஒரு கதையாக இருக்குமே தவிர கதாநாயகத் தன்மை கொண்ட ஒரு திரைக்கதை போல இருக்காது.

இந்த சம்பவத்தில் தொண்டையில் ஏற்பட்ட காயத்தாலேயே அதன்பின்னர் ஒரு கரகரப்பான அவரது குரலில் ஒட்டிக்கொள்கின்றது. பின்னர் 2008இல் விபத்தொன்றில் சிக்குகிறார். கடுமையான விபத்து அப்போதும் மரணம் அவரை முகர்ந்து பார்த்து விட்டு சென்றிருக்கிறது.

அவர் அண்மையில் கனடா வந்திருந்த போது அவரைச் சந்தித்தேன். அதே எளிமையான துறவியே எனக்குத் தெரிந்தார். அப்போது அவருடைய சிந்தனை முழுவதும் தேசம் பற்றிய எண்ணம் வியாபித்திருந்ததை என்னால் உணரமுடிந்தது. அவருடைய பணிகள் விஸ்வரூபம் எடுத்திருப்பதையும் உணரமுடிந்தது. கிளியண்ணாவின் சேவை அதிகளவில் மக்களுக்குத் தேவைப்படுவதை மட்டும் புரிந்து கொண்டேன்.

பின்னர் தொலைக்காட்சியில் செய்திகளில் அவரைப் பார்க்கின்ற போதெல்லாம் அவருடைய பணியின் பரிமாணங்கள் புரியத் தொடங்கின.

ஒருநாள் தொலைக்காட்சியில் வெண்தாடியுடன் தோன்றினார். ஓவியர் மாற்குவின் மேதமை என்கின்ற ஓவியம் பிரபலமானது. தீர்க்கமான கண்களுடனும் வெண்தாடியுடனும் ஒருவர் உட்கார்ந்திருக்கும் அந்த ஓவியம் பலபடிமங்களைக் கொண்டது. எனக்கு அந்த ஓவியமே நினைவில் வந்தது. அதன் பிறகு அவருடன் நான் பேசவில்லை.

அவருடைய பிரமாண்டங்களுக்கும் அப்பால் நுனிநாக்கைக் கடித்தபடி வெளிவரும் அவருடைய புன்னகை மாத்திரம் எங்கனும் நிறைந்து கிடக்கின்றது.

கருணா



சிறுவயதிலேயே குருத்துவக் கல்லூரிக்கு போய் குருவாக வந்தவர்களைத் தான் எனக்குத் தெரிந்திருந்தது. வங்கியில் பணியாற்றிக் கொண்டிருந்த கிளியண்ணா குருவாக வருவதற்காக குருத்துவக் கல்லூரிக்குப் போகப் போகிறார் என்பது ஆச்சரியமாகத் தான் இருந்தது.

தந்தைக்கு ஓர் கடிதம்

எனது அன்பு நிறை கிளி அடியாரே,

உம்முடைய நண்பர்கட்கு நிரந்தர பிரியாவிடை கூறுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர் வந்த உமது பிறந்த நாளன்று, தொலைபேசியில் உம்முடன் சுருக்கமாகக் கதைக்கக் கிடைத்தது. இப்போதும் உமது இருப்பிடத்தையோ, முகவரியையோ உமது புதிய நண்பரையோ தெரியாதவிடத்தும், எம்மிடையே மீண்டும் தொடர்பை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கையில் இக்கடிதத்தை வரைகிறேன்.


மனிதனுடைய கீழ்த்தரநிலையின் ஒரு வெளிப்பாடுதான், ஒருவர் இறந்தபின்பே அவரின் பண்புகளை பாராட்டுவது! நண்பா, உம்முடைய உயிரை எதிரின் குண்டு பறித்திருந்தாலும், குரலற்றோருக்கு நீர் செய்தவை யாவும், உமது மதிப்பீடுகளும், பிறர்நல நோக்குடன் நீர் செய்தவைகளும், காப்பாற்றியவர்களும், ஞாபகங்கள் அவசியமான இக்காலகட்டத்தில், அவர்களுடைய உள்ளங்களில் அழியாதிருக்கும்.

ஆழத்தில் வலையை வீசு. என்று ஆண்டவர் உம்மை அழைக்கப் பல ஆண்டுகளுக்கு முன்பே, வங்கியில் பணியாற்றிய போது, உம்மோடு எனக்கு உறவு இருந்தது. நீர் நாளாந்தம் திருப்பலிக்கு வரும்போது அடிக்கடி சந்திப்போம். ஆனால் எனது அமைதி, நல்லெண்ண உருவாக்கப் பணி நேரம், உம்மை மாங்குளத்திலும் பின்பு மல்லாவியிலும் அதன் பின்பும் மனித உரிமைப்பணி செய்துகொண்டிருந்தபோதும் சந்திக்கக் கிடைத்த காலத்திலேயே பிறருக்காக வாழும் குருவாக உம்மைக் கண்டேன். குறிப்பாக மாங்குளத்தில், உமது இறையன்பின் நீளம், அகலம், ஆழம் எவ்வளவென்றும், இந்தமிலேச்சத்தனமான யுத்தத்தில், தமது மாண்பையும், உரிமைகளையும் இழந்து தவிப்போருக்காகப் பணியாற்றுவதில் உமது அர்ப்பணிப்பையும் காணமுடிந்நது. அக்காலத்தில் இந்திய சமாதானப்படையினரின் சன்னம் உமது தொண்டையைத் துளைத்ததால் உமது குரல் பாதிக்கப்பட்டிருந்தது. எனினும், உமக்குச் செவிமடுத்தபொழுது உமது உள்ளக் குரலையே கூடுதலாகக் கேட்டு ஆழமாக இணையமுடிந்தது.

அப்போதிருந்தே, எமது ஆன்மீக வாழ்வை பிணைத்து, நிலத்தில் விழுந்து மடிந்து மீண்டும் உயிர்த்தாலொழிய குருத்துவ வாழ்வென்பது வெறும் மலட்டு, பதவிசார், பூசாரித் தன்மைகளை உடையதாயிருக்கும் என்ற உண்மையை ஏற்றவர்களாய், எமது தனித்தன்மைகொண்ட அழைப்பில் அயராதும், தேவையானால் உயிரைத்தன்னும் கொடுத்தும் உழைக்க, ஒருவரொருவரை ஊக்குவித்தோம். உமது அணுகுமுறைகளும், ஒடுக்கப்பட்டோருக்காக உழைக்கும் உமது தேர்வும், பலராலும் பாராட்டி ஊக்குவிக்கப்பட்ட அதே நேரம், வேறு சிலரால் வெறுக்கப்பட்டு, ஏளனம் செய்யப் பட்டதையும் அப்போதே நன்கு அறிந்திருந்தேன். மனிதன் இயல்பாகவே பலவேளைகளில் போலியானவனாகவும், குறைகாண்பவனாகவுமே இருக்கிறான் என்பதை நண்பா மறவாதேயும். இப்படிப்பட்டவர்களைப் பார்த்தே இயேசு யோவான் வந்தபோது அவர் உண்ணவுமில்லை. குடிக்கவுமில்லை. இவர்களோ அவன் பேய்பிடித்தவன் என்கிறார்கள். மானிட மகன் வந்துள்ளார்: அவர் உண்கிறார்: குடிக்கிறார். இவர்களோ, இம் மனிதன் பெருந்தீனிக்காரன், குடிகாரன், வரி தண்டுவார்களுக்கும் பாவிகளுக்கும் நண்பன் என்கிறார்கள் (மத் 11:18-19) என்றார். ஏனெனில், நாங்கள் கிறிஸ்துவின் பொருட்டு மடையர்கள் (1கொரி 4:10) என்றதாலாக்கும் என நினைக்கிறேன்.

இறைவாக்கினனென்றால் விசித்திரமானவனாகவும் மடையனாகவும் தானே இருப்பான். நீர் விதைத்ததையே மறைசாட்சியின் முடியாக அறுவடை செய்தீர் என்பதில் வியப்பேதுமில்லை. ஆனால் நீர் வழிபாட்டைக்கொண்டாடி, அயலவருக்குப் பணிசெய்து, உம்மை அழைத்தவரின் அடிச்சுவடுகளில் நடந்து (யோவான் 13:1-15), அவரின் பாணியில் ஒரு புனிதச் சாவைத் தழுவினீர் என்பதால், நான் மகிழுகிறேன். கோழைகளுக்கு இறையரசில் இடமில்லை. ஆனால், நீர் இப்போதிருக்குமிடத்தில் எமது மக்களுக்காகவும் நாட்டுக்காகவும் வேண்டிக்கொண்டிருக்கிறீர் என்பதும் தெரியும்.

கிறீஸ்துவில் உம் உடன்பிறப்பு,
அல்பிரேட் அலெக்சாந்தர்,
(நற்கருணைச் சபை)



பாப்புவுக்கு வைத்த சிறப்பத் திருப்பலி தான் முதல் முதலாக இரு ஆலயங்களையும் ஒரு பங்குத்திருச்சபையாக உருவாக்கிய நாள். இரு ஆலயங்களைச் சார்ந்த மக்களைத் திருப்பலியின் வழிபாட்டில் ஒரு ஆலயத்தில் ஒன்றாகச் சேர்ந்து பங்கு பெறும் சம்பவத்தை நெறிப்படுத்தினார்.

பீடப் பணியாளர் இரு தரப்பினரையும் ஒன்றாக்கினார். அருட்பணிச் சபையினரை சந்திக்கும் போதெல்லாம் இருபகுதியினரையும் ஒரே நேரத்தில் ஒன்றாகச் சந்தித்து ஒரு கருத்தைப் பெற்றார்.

கடினமனமும், சோம்பேறித்தனமும், பகிடியும், சல்லாபமும், அதிரடிகளையும் தேடித்திரிந்த இளைஞர்களை தன் கை வசப்படுத்தினார்.

தந்தையாக, தோழனாக தன்னை அவர்களுக்காக கொடுத்து ஐக்கியமாக வாழ்ந்தார். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்று ஒற்றுமையின் இரகசியத்தை அவர்களுக்க உணர்த்தி அன்புறவை ஏற்படுத்தினார்.

நாவாந்துறையின் புதிய தரிசனம்

பகை சூழ்ந்த மண்ணாய், வன்முறைகளை ஆர்வமோடு எதிர் நோக்கிய உள்ளங்களாய், சாதி வேற்றுமையில் இறுக்கமான உணர்வுகளோடு ஆனால் கிறிஸ்தவர்கள் என்ற பெயரில் வாழ்ந்த பங்கு தான் எம் நாவாந்துறைப் பங்கு.

பயந்த உள்ளுணர்வோடு பங்குத் தந்தையின் பாதுகாப்பில் வாழ்ந்த நாங்கள் கடினமான சிந்தனைகளைக் கொண்டவர்களாய் வாழ்ந்து கொண்டு இருந்த வேளையில் புதிய பங்குத் தந்தை எம் பங்குக்கு வருகை தரப் போகின்றார் என்ற செய்தி கேட்டோம். ஆனால் அச்சமும் இல்லை. அமைதியுமில்லை. நடக்கிறது தான் நடக்கும் என்ற உணர்வில் அவரின் வருகையை எதிர்நோக்கினோம்.

அப்போது அமைதிப் படையினரின் வாகனமான ஜீப் வண்டி எம் ஊருக்குள் நுழைந்தது. அவ் வண்டியில் தான் எம் தந்தை கருணரெட்ணம் அடிகளார் வந்திறங்கினார். எங்களின் மனநிலைகளை அறிந்து வந்தவர் போன்று தொடக்க நாட்களிலே ஒரு உறவுக்காரன் என்ற உரிமையை எடுத்துக் கொண்டு நாங்கள் எப்படி வாழ வேண்டுமென்ற விருப்பத்தையும், எப்படி வாழ்ந்தால் இயேசுவின் அருள் ஆசி எம் பங்குக்கு கிடைக்கும் என்ற உண்மையையும் கத்திக் கத்தி பிள்ளைகளே ஆண்டவரின் சீற்றத்திற்கு தப்புங்கள் என்ற வண்ணமாக குழந்தை தொடங்கி பெரியவர்கள் மத்தியில் கிறிஸ்துவுக்குப் புகழ் என்ற மகிமையான சொல்லை பரப்பினார்.

இந்நிலையில் எம் முன்னாள் பாப்பு 2ம் அருளப்பர் சின்னப்பரின் 25வது ஜுபிலியை மிக விமரிசையாக கொண்டாடினார். தாயாரின் மகிமையுடன் யாழ் குடாநாட்டின் பகுதிகளினால் எம்மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி வரலாற்றில் காணாத ஒரு சம்பவமாக வழிநடத்தினார்.

பாப்புவுக்கு வைத்த சிறப்புத் திருப்பலி தான் முதல் முதலாக இரு ஆலயங்களையும் ஒரு பங்குத்திருச்சபையாக உருவாக்கிய நாள்.

இரு ஆலயங்களைச் சார்ந்த மக்களைத் திருப்பலியின் வழிபாட்டில் ஒரு ஆலயத்தில் ஒன்றாகச் சேர்ந்து பங்கு பெறும் சம்பவத்தை நெறிப்படுத்தினார்.

அதைத் தொடர்ந்து பீடப் பணியாளர் இரு தரப்பினரையும் ஒன்றாக்கினார்.

அருட்பணிச் சபையினரை சந்திக்கும் போதெல்லாம் இருபகுதியினரையும் ஒரே நேரத்தில் ஒன்றாகச் சந்தித்து ஒரு கருத்தைப் பெற்றார்.

கடினமனமும், சோம்பேறித்தனமும், பகிடியும், சல்லாபமும், அதிரடிகளையும் தேடித்திரிந்த இளைஞர்களை தன் கை வசப்படுத்தினார்.

தந்தையாக, தோழனாக தன்னை அவர்களுக்காக கொடுத்து ஐக்கியமாக வாழ்ந்தார். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்று ஒற்றுமையின் இரகசியத்தை அவர்களுக்க உணர்த்தி அன்புறவை ஏற்படுத்தினார். சொல்லப் போனால் தந்திரமாக எம் மண்ணில் ஒற்றுமை என்ற விதையை விதைத்தார். அவ்விதையை வளர்க்க ஞானத்தின் ஊற்றுக்களை பசளையாகவும், நீராகவும் பொழிந்தார்.

எங்கள் விருப்பு வெறுப்புக்களையும், நாம் தேடுகின்றவற்றையெல்லாம்ஆராய்ந்து அறிந்து எம் விருப்பப்படி பணியாற்றிய குரு தான் கருணரெட்ணம்.

நற்கருணையின் மகிமையை வெளிப்படுத்தி ஒவ்வொரு அதிகாலையிலும் 5மணிக்கு நற்கருணை வழிபாடு நடத்தினார். மக்கள் அனைவரும் அந்நிகழ்வை விரும்பினதால் நாளாந்த திருப்பலிக்கு மக்கள் திரண்டார்கள். நற்கருணைப் பவனி, சமாதானத்திற்கானசெபமாலைப் பவனி, இயேசுவின் திருப்பாடுகளை வெளிப்படுத்தும் முகமாய் சிலுவைப் பாதை பவனி, யாழ் நகரின் மத்தியினூடாக செயல்படுத்த காவல்துறையினரோடும், போக்குவரத்துக் கழகத்தோடும் தொடர்பு கொண்டு வழி சீரமைப்புக்கள், மக்கள் ஒதுங்கிய வடிவுகள், பங்கு பற்றிய மக்களின் தொகை, பக்திப் பரவசத்தையும் அவர்காட்டிய விந்தையான நிகழ்வுகளை சொல்லவோ வார்த்தையில்லை.

ஒடுக்கப்பட்டவர்களையும் ஒதுக்கப்பட்டவர்களையும் இயேசு அன்ப செய்தார் என்ற ஆழமான வார்த்தையை வாழ்வாக்கினார். எம்பங்கிலே இடவசதியின்றி , வறுமை நிலையிலே யாரிடமும் எதையும் கேட்க தைரியம் இல்லாமல் இருந்த மக்களுக்கு எம் பங்கு மக்களுக்குபின் தான் யாருக்கும் எதற்கும் என்று போராடி அவர்களுக்கு இடவசதியைத் தேடிக் கொடுத்தார். அப்பகுதிக்கு அவர் இட்ட பெயர் நித்திய ஒளி அவ்விடத்தில் குடியிருக்கும் மக்களின் வளர்ச்சியில் மிக ஆழமான முறையில் அக்கறை காட்டினார். எழை எளியவர்களை மிகவும் அன்பு செய்தார்.

மாணவர்களின் கல்வியிலும், திருவருட்சாதனங்கள் பங்கில் நிறைவேற்றுவதிலும் மிகவும் கரிசனையாக இருந்தார். வேற்றுமை இல்லாமல், ஏற்றத்தாழ்வு இல்லாமல், உண்மைக்கும், நீதிக்கும், குரல் கொடுக்கும் அச்சமில்லா உள்ளங்கொண்டவர் தான் எம் பங்குத்தந்தை கருணாரெட்ணம் அடிகளார். அத்தோடு அன்பியக் குழும வாழ்வை ஆரம்பித்து தானும் வலயங்கள் தோறும் அன்பியம் கூடும் குடும்ங்களோடு ஒன்று சேர்ந்து மகிழ்வினைத் தந்த எம் தந்தையை வாழ்வில் மறக்க முடியாது.

கோமதி

குருக்களின் பலிகள்

அச்சுறுத்தலும் சவாலும்

தமிழ் ஈழ விடுதலைப் பயணத்தில் பல உயிர்ப் பலிகள் நாளாந்த நிகழ்வாக நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் பல நாட்கள் வருடங்களுக்கு இவைகள் நடக்க வேண்டி நேரிடக் கூடும். குழைந்தகள் தாய்மார்கள்: இளைஞர் இளம்பெண்கள்: வாலிபர் வயோதிபர் என்ற வேறுபாடின்றிதமிழன் என்ற ஒரே காரணத்தால் எல்லோரும் பலியாகின்றனர். இவர்களையிட்டு தமிழினம் முழுவதும் மிக வேதனை அனுபவிக்கின்றது.

பலியாகிய இவர்களுக்குள் சிலரை விசேட முறையில் நினைவு கூர்வதும் கௌரவிப்பதும் எமது வளக்கமாயிற்று. விடுதலைப் பயணத்தை தொடர்ந்து நடத்தி: விடுதலை இலட்சியத்தை அடைய வேண்டுமாயின்: அதற்கு வேண்டிய ஆன்ம சக்தியும்: மனத் துணிவும் உடல் வீரமும் என்றும் விறுவிறுப்பாய் இருக்க வேண்டும். இதற்காகவே நாங்கள் இந் நினைவு கூரும் நிகழ்வுகளை நடாத்துகின்றோம். தமிழினத்தின் பகிரங்க மதிப்பையும் கௌரவத்தையும் பெறுபவர்களில் பல் வேறு திறமைகளைக் கொண்டவர்கள் அடங்குவர். தேசியத் தலைவர்கள்: அரசியல்வாதிகள்: மாவீரர்கள்: ஊடகவியலாளர்கள்: தற்கொடை வீரர்கள்: மனிதபமானப் பணியாளர்: என பலர் இடம் பெறுவர். இவர்களுக்குள் சில கிறீஸ்தவ குருக்களும் அடங்குவர். இவர்களை கிறீஸ்துவின் இலட்சிய வழியில் நடத்தியதில் எமக்கும் பங்குண்டு. இதையிட்டு தந்தைக்குரிய கவலையும் பெருமையும் அடைகின்றேன்.

1981ம் ஆண்டின் பின் கிறீஸ்தவ குருக்கள் பாதிரிமார் இலங்கை அரச பயங்கர வாதத் தாக்குதல்களுக்கு இலக்காகி வருகின்றனர். கிறீஸ்துவினால் போதிக்கப் பட்ட அன்பு: இரக்கம்: சகோதரத்துவம்: தோழமை என்ற அடிப்படையில் மனித அபிமான பணியில் ஈடுபட்டிருந்த தமிழ் ஆயர்கள் குருக்களை குற்றஞ் சாட்டுவதும்: தூற்றுவதும்: ஏன் படு கொலை செய்வதும் இலங்கை அரச பயங்கரவாதத்தின் வாடிக்கை செயலாயிற்று. அவைகளை கண்டிப்பதற்கோ நிறுத்தவதற்கோ நல்லவர்கள் மௌனம் சாதிப்பர் அல்லது துணிவின்றி மறு வழி செல்கின்றனர். மிக வருத்தத்துக்குரியது. வெட்கத்துக்குரியது. ஆனால் அந் நிகழ்வுகளிலிருந்து எழும் கேள்விகளையும் சவால்களையும் சந்திக்க வேண்டியது நாங்களும் திருச்சபையும் எஞ்சி இருக்கும் அதன் தலைவர்களும்தான். இன்றைக்கு நாங்கள் அண்மையில் பலியாகிய சேவியர் கருணரட்னம் அடிகளார் அல்லது அன்பாக அழைக்கப்படும் கிளி பாதரை நினைவு கூர்ந்து கௌரவிக்கின்றோம். இவரின் பின்னணியையும் குடும்பத்தையும் ஓரளவு நான் அறிந்திருந்தேன். அதற்கும் மேலாக இவரின் பணி உருவாக்கத்தில் ஆசிரியனாகவும் அதிபராகவும் கடமையாற்றிய பின் இவரின் குருத்துவ சேவையுடன் இணைத்து மக்கள் விடுதலைக்காகவும் துணிவுடனும் ஆர்வத்தடனும் ஆற்றிய பணியையும் அறிவேன். இப்படித்தான் மற்றைய நமது மாணவர்களைப் பற்றியும் பல கூறவுண்டு.கிறீஸ்தவர்களுடைய விசுவாசத்தின் படி இயேசு முழு மனித விடுதலைக்காக பணி புரிந்து அதற்காகவே தம்மை சிலுவையில் பலியாக ஒப்புக் கொடுத்தார் என்கின்றோம். பாவத்தினால் வந்த அடிமைத்தனங்கள் பல. அவைகள் மனிதனின் உள்ளத்திலும் உறவிலும் உறைந்திருக்கின்றன. பொய்: அநீதி: அடக்கு முறைகள்: சுரண்டதல்: ஒரு புறம் சாதி வேற்றுமை: சீதனம் அதன் விளைவாக இன்னும் பல திருச்சபைக்காக மக்களல்ல: மக்களுக்காகவே திருச்சபை:மனித உரிமைகளைத் தேடிப் போராடும் மக்களின் மத்தியில்:கிறீஸ்துவின் திருச்சபையும் அதன் தலைவர்களும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?திருச்சபையின் தலைமைப் பீடத்தின் ஒற்றுமைக்காக: மௌனம் சாதித்து:

மக்களையும் அவர்களின் மேய்ப்பர்களையும் எவ்வளவு காலம் பலி கொடுப்பது?
நீண்ட காலம் மௌனம் சாதித்தால் நாம் ஊமைகள் போல் ஆகிவிடுவோம்.
பேச்சு வன்மையற்றவராகி விடுவோம்.
மற்றவர்க்காய் குரல் கொடுக்க நாம் தவறின்
ஈற்றில் எமக்காய் குரல் கொடுக்க யார் இருப்பார்?

எஸ் ஜே. இம்மானுவல்

ஐயோ, எம் தந்தையே

என் அன்பின் அப்பா
நீக்கிலாருக்கு கொடி ஏற்ற
ஆயத்தமானோம் உம் பங்கின் மக்கள் நாம்
காற்றலையில் கேட்டதப்பா உம்
திடீர் இறப்பின் கொடிய செய்தி
ஐயோ!
எப்படிச் சொல்வேன்
பித்துப் பிடித்து அலைந்து திரிந்தோம்
நாவாய் மண்ணிற்கு காலடி பதித்து பணி தொடர்ந்தீர்
அப்பா
இன்று உம் பிரிவால்
நாவாய் மண் கலங்குதப்பா, கதறுதப்பா
நாவாய் மக்களுக்காக கருவிலே வந்துதித்த
கருணையின் கிளியப்பா
உம் பிரிவு எம்மைக் கலங்க வைக்குதப்பா,
உலக சமாதானத்திற்காகவும் அல்லலுற்று அவதியுற்று
அலையும் உம் அன்பின் மக்களுக்காகவும்
குரல் கொடுத்து வாழ்ந்தீரேயப்பா.
இன்று எமக்காக குரல் கொடுக்க யாருண்டு அப்பா.
தொடர்ந்ததப்பா நாவாயில் உம் அரும் பெரும் பணி
குழும வாழ்விலும், குடும்ப வாழ்வை அன்பியத்திலும்
கைகலக்கியது உம்பணி
நாவாய் மக்களின் கரங்களிலே பைபிளை ஏந்த
வைத்தாய்
ஏழைகள் மட்டிலும் அநாதைகள் மட்டிலும்
மாணவரகள் மட்டிலும்
உம் கருணையின் பணி பெருக்கெடுத்து ஓடியது
நாவாய்க்கடலில்
யாருக்காகவும் எதையும் விட்டுக் கொடுப்போம் -
ஆனால்
என்ர சனத்தை யாருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டேன்
என்ற வாக்கை தன் உயிர் மூச்சாகக் கொண்டீரே
அப்பா.
ஐயோ எப்படிச் சொல்வேன்
உம் இறப்பின் துயரத்தை மறக்க முடியுமோ

சோபனா
நாவாந்தறை

எனது தமிழ்ச் சகோதரன் ஞாபகமாக

கிளி அண்ணா அவர்கள் உங்களுக்குச் செய்தது என்ன?

...நீங்கள் தெற்கிற்கு விஜயம் செய்து துன்பப்படும் அதிகமான சிங்கள மக்களை சந்திக்க ஆவல் கொண்டீர்கள். வெறுங் காலோடு பயணம் செய்ததையும், சிரித்த முகத்துடன் வாழ்த்தியதையும், ஆவலோடு செபித்ததையும், பலகாலம் பழகியவர்போல் முறிந்த உங்களது சிங்களத்தையும் அவர்கள் பார்த்து சுவைத்தார்கள். தெற்கின் சிங்கள மக்களும் தங்களை கிளி பாதர் என்று அன்போடு அழைத்தார்கள். நீங்கள் என்னை தம்பி என்று அழைத்தீர்கள். நான் உங்களை அண்ணா என்று அழைத்தேன்...

...உங்களுடைய நித்திய இளைப்பாற்றியில், சிங்களவர்கள் தமிழர்களின் போராட்டத்தை ஏற்றுக் கொள்வது பற்றி நீங்கள் இன்னும் கனவு காண்கின்றீர்களா? சிங்களவனாகிய என்னை இன்னும் நம்புகின்றீர்களா?...

...உங்களை அவர்கள் ஏன் கொன்றார்கள்? அவர்கள் எப்பொழுதும் இலங்கையிலும் ஈழத்திலும் வாழும் ஒடுக்கப்பட்டவர்கள்பால் தாகம் கொண்டிருந்த மனிதநேயம் மிக்க ஒரு தமிழரை கொன்றார்கள். இவர் தமிழ் கலாச்சாரத்தில் ஊறித் திளைத்து அந்த அனுபவத்தை சிங்களவர்களோடு பகிர வேண்டுமென்ற தாகம் கொண்டவர். உங்களுடைய சாவு தமிழர்களால் ஈடுசெய்யப்பட முடியாது. இந்த சிங்களத்தின் மனச்சாட்சியின் என்றும் மாற்ற முடியாத கறையாகப் படிந்துள்ளது. இந்நேரத்தில், இந்தக் கறையை எப்படி மாற்றுவது என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியவில்லை ஆனால் உங்களுக்குத் தெரியும் ஏனெனில் எந்த விடயத்திற்கும் உங்களிடம் ஒரு விடை உண்டு. 'முடியாது' என்பதுகளையும் கடந்து சாதிக்கிற கனவுகள் உங்களிடம் நிறையவே இருந்தன...

...எண்ணற்ற தடவைகள் நீங்கள் என்னைச் சந்திக்க வந்தீர்கள். சமாதான காலங்களில் மட்டுமல்ல கொடூரப் போர் நடந்த வேளைகளிலும் என்னிடம் வந்து சிங்களக் குழுக்களைச் சந்தித்தீர்கள். என்னையும் சிங்கள நண்பர்களையும் அழைத்து யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் அவ்வாறான கூட்டங்களை ஒழுங்கு படுத்தினீர்கள். நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் எத்தனை கூட்டங்களை ஒழுங்குபடுத்தினோம்?...

...நீங்கள் என்னைச் சந்திக்க வரும் பொழுது வன்னியின் தேன் போத்தலோடும் தோலகட்டியின் நெல்லிக்கிறசோடும், ஒடியல், கறுத்தக் கொழும்பான், பருத்தித்துறை வடை என்பவற்றைக் கொண்டு வருவீர்கள். உங்களுடைய மக்கள் பட்டினியாக இருக்கும் பொழுதும் அவர்களுடைய இதயங்களை எம்மிடம் கொண்டு வந்தீர்கள். ஒரு தடவை ஒரு பெரிய மக்கள் குழுவோடு கூட்டம் நடந்து முடியும் வேளையில் வடக்கின் அகதி முகாம்களின் மக்களின் பட்டினி சாவை நீங்கள் சொன்ன போது இங்கு வந்திருந்தவர்கள் வடக்கு மக்களுக்குத் தேவைப்படும் உணவுப் பொருட்களை சேகரிக்கத் தொடங்கினர். ஆனால் நீங்கள், ...நீங்கள் என்னை தவறாகக் கணிக்க வேண்டாம். உண்மையிலேயே உங்களுடைய இரக்க எண்ணத்தை நான் பாராட்டுகின்றேன். இது எவ்வாறு மனிதர்கள் ஒருவர் ஒருவருடைய துன்பங்களை உணர்ந்து கொள்ளலாம் என்பதைக் காட்டுகின்றது இதற்காக உங்களுக்கு நன்றி சொல்கின்றேன். உங்களுடைய அன்புக்கு எனது நன்றிகள் தேவையில் இருப்போருக்கு நீங்கள் தருவதை என்னால் மறுக்க முடியாது. இருப்பினும் இந்த நோக்கத்துடன் நான் இங்கு வரவில்லை. எமது போராட்டத்தை நீங்கள் தெளிவாக அறிந்து அரசியல் ரீதியான தீர்வைப் பெற ஒத்துழைக்க வேண்டுகின்றேன். இப்பொருட்களை சேகரிப்பதிலும் பார்க்க போரை எதிர்த்தும், பேச்சு வார்த்தைக்கான அழைப்பை விடுத்தும், தமிழர் சிங்களவர் எனப்பிரிக்கும் சிங்கள ஏகாதிபத்தியத்தையும் எதிர்க்க உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். தமிழர்களுடைய விடிவை ஆழமாக அன்பு செய்த நீங்கள் ஒடுக்கப்படும் சிங்கள மக்களின் விடுதலையையும் எதிர்பார்த்தீர்கள். நீங்கள் இப் பொழுது எங்கே இருக்கிறீர்கள்? அதே ஏகாதிபத்திய அதிகாரம் உங்களை அழித்து விட்டது. தொடர்ச்சியாகவும், உணர்வோடும் ஒலித்துக் கொண்டிருந்த அந்தக் குரல் அழிக்கப்பட்டுள்ளது. திறந்த மனதுடனும், துணிவுடனும் சிங்கள மக்களுக்கு செய்திகளை வழங்கிய சிவராம், ரவிராஜ் போன்ற பல தமிழர்கள் பயணித்த அதே பாதையில் நீங்களும் பயணித்திருப்பீர்கள்...

...2004ல் அகில இலங்கை கடற்தொழிற்சங்கம் முன்னெடுத்த மேதினத்தில் நீங்கள் முக்கிய

பேச்சாளராக இருந்தீர்கள். தமிழ் சிங்கள முஸ்லிம் மீனவர்களால் நீங்கள் வரவேற்கப்பட்டீர்கள். கூட்ட நிறைவிலே " தம்பி, இன்றைய நாள் என் வாழ்க்கையில் மிக சந்தோசமான நாள் எமக்கு ஒரு எதிர்காலம் இருக்கிறது" என்றீர்கள். வன்னியின் காடுகளையும் தெற்கின் சிங்கராஜவனத்தையும் நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தீர்கள். தாய் மண்ணை நேசித்த உங்களைப் பற்றி அந்த சிங்களவர்களுக்கு ஏதும் தெரியுமா?...... சந்திரிகாவின் அமைதிக்கான போரில் பல்லாயிரக்கணக்கான சிறார்கள் போசாக்கின்றி வாழ்ந்த போதும் அவர்களுக்கான ஒரு வேளை உணவை ஒழுங்குபடுத்தினீர்கள். வன்னி சிறார்களைப் பற்றி நீங்கள் பேசியபோதெல்லாம் தெற்கில் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாவது பற்றி நீங்கள் பேச மறந்ததேயில்லை. நீங்கள் ஒருசில போராட்டங்களில் எம்மோடு இணைந்து பங்குபற்றினீர்கள். இதுபற்றி சிங்கள சிறார் உரிமை காவலர்களுக்கு எதுவும் தெரியுமா? நுரைச்சோலையில் கட்டப்பட்ட அனல்மின் நிலையம் மூலமாக பலநூறு மக்கள் பாதிக்கப்படப்பட்டதை அறிந்து அதற்கு எதிராக குரல் கொடுத்தீர்கள் இரணவில பகுதியில் வோயிஸ் ஒவ் அமெரிக்கா வானொலி நிலையம் அமைப்பதற்கு எதிரான சிங்களவரது போராட்டத்தில் இணைந்து கொண்டீர்கள்...

...தமிழ் தேசத்தில் நீங்கள் என்னை பேசக் கூப்பிட்ட போதெல்லாம் சிங்கள மக்கள் மத்தியில் சிறப்பாக சிங்கள அரசின் ஆளுகையில் மக்கள் சந்திக்கும் துன்பங்கள் பற்றி பேச கேட்டுக் கொண்டீர்கள். நான் தமிழ் மக்களின் துன்பங்களைக் கண்டு ஒப்பிட்டு நோக்க தயங்கிய போதெல்லாம் என்னை உற்சாகப்படுத்தினீர்கள். தமிழ் மக்களின் துன்பங்களையும் அபிலாசைகளையும் நான் விளங்கிக் கொள்ள வழி சமைத்த போதெல்லாம் சிங்கள ஒடுக்கப்பட்ட மக்களின் துன்பங்களையும் விளங்கிக் கொள்ள என்னைத் தூண்டினீர்கள். நீங்கள் என்னைச் சந்திக்க வந்த போதெல்லாம் சிங்கள விவசாயிகள் கடற்தொழிலாளர்கள் பகிஸ்கரிப்பாளர்கள், வர்த்தக வலய பெண் தொழிலாளர்களைச் சந்திக்க உங்களை அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது. போரில் இறந்த சிங்கள இராணுவத்தினரின் குடும்ப அங்கத்தவர்களையும் நீங்கள் சந்தித்தீர்கள். அவர்களது கண்களை உற்று நோக்கி, கரங்களைப் பற்றிப் பிடித்து, ஆறுதல் வார்த்தைகள் சொன்னீர்கள்...

...மனித நேயம் மிக்க தமிழ் சிங்கள உறவுகளை உருவாக்கும் உங்களது பணி சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு ஒரு சவாலாக இருந்தது. படுகொலைகளைச் செய்யும் இந்த சிங்கள ஏகாதிபத்திய போரியந்திரமானது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை மனித உரிமை மீறல்களை நீங்கள் வெளிப்படுத்திய போது அவர்கள் கோவம் கொண்டார்கள். உங்களை மௌனியாக்கிய பொழுது தமிழர்களுக்காகவும், சிங்களவர்களுக்காகவும் உருகிய உங்கள் இதயத்தையும் மௌனமாக்கினார்கள். சிங்கள ஏகாதிபத்திய அரசையும், சிங்கள மக்களையும் வேறுபடுத்திய எமது முயற்சிகள் தோல்வியாக அமையுமா அண்ணா?...

...மாங்குளத்தில் நீங்கள் ஒரு விவசாயி. வலைப்பாடு இரணைதீவில் நீங்கள் ஒரு கடற்தொழிலாளி, இரணைமாதா நகரில் நீங்கள் ஒரு கட்டடக் கலைஞன். விருட்சம் பத்திரிகையூடாக பத்திரிகையாளராகி, வெரித்தாஸ் ஊடாக ஒலிபரப்பாளராகினீர்கள். நீங்கள் ஒரு ஆசிரியர், மறைப்போதகர் உங்களுடைய ஆளுமை வித்தியாசமானது அளப்பெரியது. பல போராட்டங்களை தமிழர்களின் விடிவிற்காக முன்னெடுத்து சிங்கள மக்களின் விடிவையும் சுட்டிக்காட்டிய தீர்க்கதரிசி நீங்கள்...

...உங்களைக் கொல்ல திட்டமிட்டவர்கள் என்ன செய்கிறோம் என்பது பற்றி அவர்களுக்கு ஏதாவது தெரியுமா? யாரைக் கொன்றார்கள்? இவர்கள் ஒரு பன்னாட்டவரை கொன்றார்கள். பிளவுபட்ட இலங்கையின் சமூகங்கள் மத்தியில் மனித நேய ஒற்றுமையை உருவாக்க முனைந்தவரைக் கொன்றார்கள். இந்த உலகம் முழுவதும் நீதியையும் அமைதியையும் உருவாக்க துடிப்பவர்களுக்கு இவர் எமது சகோதரன் என்பதும் வவுனிக்குளம் மல்லாவி வீதியில் ஒற்றுமைக்காக குரல் கொடுத்தவர்...

Dr. Jude Lal Fernando,
Irish School of Ecumenics,
University of Dublin
26 April, 2008.



நட்பின் தீபம்

அன்பின் நண்பனே என்றும் புன்னகை தவழும் முகத்துடன் காட்சி தருவாயே. அன்று ஆசிரியர்களாக நாம் இருவரும் தோழமை கொண்ட நாட்களை நினைவு கூர்கின்றேன். எமது இளமைக்காலம் சிறு வயதிலே சேவை உள்ளம் கொண்டவன் நான் என்பதைத் ஏழைச் சிறுவர்களுக்கு ஆங்கிலக் கல்வி புகட்டியதன் மூலம் காட்டியவர் அல்லவா நீங்கள். உங்கள் மொழி கிளி பேசும் மொழி போல் மென்மையான மொழி என்பதால் தானே கிளி சேர் என தங்கள் மாணவர்களால் செல்லமாக அழைக்கப்பட்டீர்கள். தங்கள் கருணையின் வடிவம் தங்கட்கு கருணாரட்ணம் என்னும் இயற்பெயரைக் கொடுத்ததோ? ஆங்கில மொழியில் சிறந்த தேர்ச்சி கண்டு தங்களைக் கரம் நீட்டி அழைத்த போது உறவுகளுக்கு வளமான வாழ்வு கொடுத்தவர் அல்லவா நீங்கள்.

தங்களின் உள் உணர்வு துறவு வாழ்வை நோக்கி தங்களை அர்ப்பணிக்க தூண்டியது. துறவுப் பணியில் எமது பிரதேச மக்களுக்கு மாத்திரம் அல்லாமல் சென்ற இடம் எல்லாம் தங்கள் செய்கையால் பிறந்த பிரதேசத்திற்கு பெருமை தேடி தந்தவர் அல்லவா நீங்கள். பிறர் துயர் கண்டு ஓடோடிச் சென்று தாங்கள் உதவிய நாட்கள் இன்றும் எம் மனக் கண்முன் தெரிகிறது. அன்று மன்னாரிலிருந்து சங்குப்பிட்டிக்கு வருகை தந்த போது பருத்தித்துறை பஸ் சென்று விட்டதை அறிந்து யாழ்பாணம் வந்த போது நீங்கள் கற்ற துறவு பாடசாலையில் எங்களை வரவேற்று இரவு தங்க வைத்து, காலையில் வழியனுப்பிய அந்த நாட்களுடன் சிறிது இடைவெளியுடன் இருந்த எமது பிரிவு மீண்டும் புத்துயிர் பெற்றது. துறவு வாழ்க்கையில் எங்கு சென்றாலும் பிறந்த மண் கற்ற கல்லூரி உறவுகளை என்றும் மறந்தது இல்லை. உயர்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும் எவ்விடர் வந்த போதிலும் கலந்து எம்மைப் பெருமைப் படுத்திய நாட்களை என்றும் மறக்க முடியாது.

நேர் கொண்ட பார்வையுடன் சிம்மக் குரலில் நீர் செப்பிய கருத்துக்கள் என்றென்றும் எம் மனங்களில் ஒலித்துக் கொண்டே இருக்கும். விருட்சத்தின் ஊடக துறை வளர ஊக்கமுடன் செயலாற்றிய உத்தமனே, நீதிக்கும் உண்மைக்கும் குரல் கொடுத்த பேராளனே, எம் மக்களின் மனங்களை துறவு வாழ்க்கைக்கூடாக வென்றெடுத்து, துறவு வாழ்க்கையைப் பெருமைப்படுத்திய உத்தம சீலன் நீரல்லவா. கருணையின் உறைவிடமாக வாழ்ந்த புனித தீபம் ஓய்ந்த செய்தி என்னை மாத்திரம் அன்றி கரவை மண்ணை கலங்க வைத்த சோகம் சொல்லி மாளாதது. பெற்ற தாய் எமது முன்னாள் ஆசிரியை. குடும்பமே எமது கல்லூரியின் முன்னாள் மாணவர்கள். கல்லூரியை விட்டு வெளியேறிய போதிலும் நான் கேட்ட போது எமது ஒளிவிழாவிற்கு நீர் வந்து உதிர்த்த வார்த்தைகள் என்னைப் பெருமைப் படுத்தியமையை நினைத்து கண்கள் குளமாகின்றன.

ஆறாது ஆறாது அழுதாலும் தீராது உனது பிரிவு இன்று கர்த்தருடன் உம்மை இணைத்துக் கொண்ட போதிலும் என்றும் எம் நெஞ்சை விட்டகலாத தீபம் என எமது கல்லூரிதாய் ஒலிக்கின்றாள் விண்ணில் இருந்து எமக்கு நீர் சொரியும் வாழ்த்து ஒலிகள் பூமழைகள் நீர் கொண்ட கனவை நிறைவேற்றி, எம் மனங்கள் மகிழ்ந்திட வழி சமைக்கும். உத்தம நண்பனே உரிமையுடன் நான் வாழ ஆற்றொணாத் துனபங்களை சுமந்தாய் இயேசுகிறிஸ்து போன்று வாழ்நாள் முழுவதும் சிலுவையைச் சுமந்து, ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் கண்டாய். அர்த்தம் உள்ள வாழ்வு கண்ட உன்னை கர்த்தர் நிட்சயம் தன்னுடன் அணைத்துக் கொள்வார்.

திரு. வே. சிவசிதம்பரம்
அதிபர்
யா. விக்கினேஸ்வராக்கல்லூரி


தந்தைக்கு ஓர் கடிதம்

எம் ஊரின் சித்தாந்தங்கள் வேறாக
இருந்தாலும் எங்களை பங்கு
மக்களாகவே மதித்து எங்கள்
மனங்களில் உமக்கொன்றொரு
நிரந்தரமான
ஓர் உறவையும்
தங்குமிடமும் தர இசைந்த
உங்களுக்கு...
சித்திரை மாதத் தினத்தில்
திருவிழா கொண்டாட 20ம் திகதி
கொடியேற்றி நவநாளை தொடக்கி
வைக்க நினைத்தோம்
நாம்
இடிமழையாக வந்தது
ஓர் செய்தி
மல்லாவியில்கிளைமோராம்
கிளி பாதர்
ஸ்தலத்திலேமரணம்என்று
மார்பால் மதுரையை எரித்த
பாண்டிய நாட்டு மக்களின்
அழுகையை நான் பார்த்ததில்லை
ஆனால் எம் மக்களின்
அழுகுரலைப்பார்த்துத்
தெரிந்து கொண்டேன் அதை
ஆறாத்துயரில் மூழ்கியருந்த
நீக்கிலார் கொடி அழுதுகொண்டே
ஏறியது அரைக் கம்பத்தில்
மாலை நான்கு முப்பதுமணிக்கு
அழுதது எவருக்கும் தெரியவில்லை
கண்ணீரின் கனம் காற்றால் கூட
கொடியை அசைக்க முடியவில்லை
பறவைகளுக்கும் துறவிகளுக்கும் நிரந்தர
சரணாலயம் இருப்பதில்லை நீரும் ஓர்
பறவை தான் நிரந்தரமில்லாத
உலகின்
நித்திய துறவி
என்பதை காட்டிவிட்டீர்
எந்த விடயத்தையும் கண்ணியாக
கடைப்பிடித்தீர்
கடைசி நேரத்தில் என்ன நினைத்தீர்
ஐயோ என்ர ஜனங்களை
விட்டுப் போகிறேனே என நினைத்தீரோ
சிறியோர் முதல் பெரியோர்வரை
வேதங்கள் படித்திட
வேதாகமத்தைகையிலெடுக்கவைத்தீர்

தூசி படிந்தபைபிளுக்கு
தூபம்காட்டவைத்தீர்
துள்ளித் திரிந்த சிறுவர்களை
சிறப்பாக நடக்க வைத்தீர்
யாரால் முடியும இதைச்
செய்ய இன்னும்எத்தனை செய்தீர்
எம் பங்கிற்குஎன்னால் முடியுமா?
அத்தனையும் கூற
அறிவுரைக்குஆசானாய்
அன்பிற்க்கு அன்னையாய்
தொண்டுக்குப்பண்பாளனாய்
கண்டிப்புக்குஅரசனாய்

உங்கள் உழைப்பால்எம்மை
வளமாக்க முடியாது என்றுஎண்ணியே
உமதுஇறப்பால் வளமாக்கினீர்
என்பதை பத்திரிக்கையில்
படம்பார்த்து உணர்ந்து கொண்டேன்.
செல்லமாய் உமைக் கிளி
என்பார்களோகிளிக்கு அர்த்தம்
நீங்கள் என்றால் எந்தக்
கிளைகளில் இனிஇந்தக்
பங்குக் கிளியைத்தேடுவது
ஆனால் ஒன்றுமட்டும்
சொல்லத் தெரியும் என்னால்
வாழ்க்கையில்எத்தனையோ
பயணங்கள்
அந்தப்பயணங்களில்
சில பயணங்களையும
சில மனிதர்களையும்
மறக்கமுடியாது
என்பதை

இப்படிக்கு
பங்குமகன்
இ. றிச்சார்ட் லெபனான்



இவன்
எப்போதும்
உயிர்ப்புடன்
இருப்பவன்
புதிய தரிசனத்துக்காய்
சிறகுகளைச்
சுமந்து
கல்வாரி நோக்கி
நடப்பவர்களுக்கு

காலின் வெறுமை
முட்கள்
கற்கள்
வனங்கள்
மரணங்கள்
யாவும் சேர்த்து
மக்கள் இறையியலை
கட்டியெழுப்ப வைத்துள்ளது